www.padippakam.com

# அக்கினிக் குஞ்சு

புலம்பெயர்ந்த ஈழத் தமிழரின் சர்வதேச கலாசார - இலக்கிய மாசிகை



யாழ்.எஸ்.பாஸ்கர்

படிப்பகம்

www.padippakam.com


# இந்து சமய கலாசார சேவை

## SIVASRI M. KAILASANATH KURUKKAL



- திருமண வைபவங்கள்
- புதுமனை புகுவிழா
- நாட்டிய அரங்கேற்ற வைபவங்கள்

ஆகியவற்றை இந்து சமய ஆசாரப்படி நடத்திடவும்-

- கைரேகை சாஸ்திரம்
- ஜாதகம்
- திருமணப் பொருத்தம்

ஆகியவற்றைத் துல்லியமாகக் கணிப்பிட்டு அறிந்திடவும்-

தொடர்பு கொள்ளுங்கள்:

சிவாச்சாரிய மணி

**சிவஸ்ரீ முத்து கைலாசநாதக் குருக்கள்**

8/3-5 EDWARD AVENUE
DANDENONG
VIC 3175
AUSTRALIA


படிப்பகம்

12/7/91

அட்டைப் பட விளக்கம்:




## பூங்கதவே தாழ் திறவாய்!

சொர்க்கத்தின் பூங்கதவுகள் அகலத்திறந்து கொண்டன. புகழ் பூத்த புண்ணியர் இருவர் பூவுலகப் பயணத்தை உன்னியதின் வினை! ஒருவர் புத்தர். முடமான இளமறியை தோளிலே சுமந்தவர். அகிம்ஸையின் போதகர். இனவேறுபாடுகளையும் பிராமண வர்ணாசிரமத்தையும் களைந்தவர். அட்ட சீலங்கள் கற்பித்து, சித்த பரிசுத்த மூலம் பரிநிர்வாணப் பேறு பெற்றவர். போதி மாதவர். சற்றும் யோசிக்காமல் ஸ்ரீலங்கா சென்றார். அட்சரம் பிசகாது தமது போதனைகள் அங்கு பாதுகாக்கப்படுவதாகக் கேள்விப்பட்டார். போயா தினங்கள், சீலம் அனுஷ்டிக்கும் தினங்களாக, மதவழிபாடுகளிலே தோய்த்தெடுக்கப்படுவதாகவும் பிரஸ்தாபம். மண்ணாசை துறந்தவர். குடும்ப பாசம் வென்றவர். தமிழ் மண்ணை ஆக்கிரமிக்கும் போருக்குத் தூபமிடும் மதச்சடங்குகளிலே ஈடுபட்டிருக்கும் சீவர ஆடை புனைந்த பல்லாயிரம் பிக்குகளைக் கண்டதும் விக்கித்துப்போனார். மீண்டும் நல்லன போதிக்க உன்னினார். விமானப் பறப்புகளிலும், குண்டு வீச்சுகளிலும் அவர் குரல் எவர் செவிகளிலும் விழவில்லை.

மற்றவர் ஏசு பிரான். ‘முழு உலகத்தையும் வென்று, தன் சொந்த ஆன்மாவை இழக்கும் மனிதனுக்கு என்ன லாபம்’ என்று கேட்டவர். முள் முடி தரித்தவர். பாவிகளுக்காக, சிலுவையில் அறையுண்டு மனித குமாரனாய் மரித்தவர். தமக்குப் பழக்கமான ஜோர்தான் நாடு ஏகினார். தமது ஊழியத்தினை ஏற்று, ஞான ஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்கள், செல்வச் சீமான்களின் சார்பாக, `புத்திபுகட்டும்’ யுத்தத்தில் ஈடுபட்டிருப்பதைக் கண்டார். ‘ஊசியின் கண் வழியிலே ஓர் ஒட்டகம்...’ என்று மீண்டும் நல்லன போதிக்க உன்னினார். விமானப் பறப்புகளிலும், குண்டு வீச்சுகளிலும் அவர் குரல் எவர் செவிகளிலும் விழவில்லை.

பூவுலகில், பூட்டப்பட்ட பூங்கதவுகளின் பின்னால் நிற்கும் இந்தச் சிறார் கூட்டம் புண்ணியர் இருவரின் கண்களிற் படவில்லை. அந்தக் ‘கதவுகள் எப்பொழுது திறக்கும்’ என்ற அந்தப்

-5ம் பக்கம்

**அக்கினிக்குஞ்சு**

புலம் பெயர்ந்த ஈழத் தமிழரின் சர்வதேச கலாசார இலக்கிய மாசிகை

கதைகளிலே வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே. கட்டுரையாளரின் கருத்துக்கள் ‘அக்கினிக்குஞ்சு’வின் கொள்கையை பிரதிபலிக்க வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை.

பிரதம இலக்கிய ஆலோசகர்:
எஸ்.பொ.

ஆசிரியர்:
யாழ்.எஸ்.பாஸ்கர்

துணை ஆசிரியர்கள்:
ரி.தர்மகுலசிங்கம், இளம்பிறை எம்.ஏ.ரஹ்மான்

INTERNATIONAL CULTURAL AND LITERARY MONTHLY OF DISPLACED EELAM THAMILS.

Chief Literary Advisor : Espo

Editor : Yal S.Baskar
Australia(03)555-3230

Deputy Editors : T.Tharmakulasingam
Denmark (75) 588-512.

: Ilampirai M.A.Rahman
India.
P.P.420011.

தகையினை தீ சுடினும் — ஈழ
தமிழது தளர்வுற தாங்குமோ நெஞ்சு
விகைமிகு வேள்வியினை — ஆழ
வித்திட விளைந்தது அக்கினிக் குஞ்சு

Correspondence Contribution & Subscription Address
PRIYA PUBLICATIONS P.O.BOX 470 MOORABBIN VIC-3189 AUSTRALIA

அவுஸ்ரேலியா பிரியா பப்ளிகேஷன்ஸுக்காக ஏஆர் பிரிண்ட்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்: எம்.ஏ.ரஹ்மான்

www.padippakam.com

# மனம் விட்டுப் பேசுவோம்

அக்கினி குஞ்சு வின் இதழ்கள், ஒவ்வொரு நாட்டிலும் 'ஓகோ' கணக்கில் விலைபோகிறது என்று பொய்யுரைக்க ஒப்போம். இதனைத் துவங்கிய பொழுது ஈழத்து தமிழர்கள் 'விழுந்து விழுந்து' வாங்கி விற்பனைச் சாதனையை ஏற்படுத்த உதவுவார்கள் என்று நாம் எதிர்பார்க்கவும் இல்லை. ஒன்றிலே வெளியாகும் துணுக்குகளையும், 'கிசுகிசு'க்கள் வகையறாக்களையும் எண்ணிப்பார்த்தே சஞ்சிகையின் தரத்தினை எடைபோடும் வாசகர்களையே இலட்சக் கணக்கில் விற்பனையாகும் குமுதம், கல்கண்டு, ஆனந்தவிகடன் ஆகியன உருவாக்கிக் கொண்டிருக்கும் பொழுது, நமக்கு ஒரு பரந்த வாசகர் கூட்டத்தினை எடுத்தடிமடக்காக உருவாக்கிக் கொள்ளலாம் என்கிற கனவுலகிலே நாம் வாழவும் இல்லை. போராட்டம் என்று வந்து விட்டால் கஷ்ட-நஷ்டங்களும் உண்டு. நோக்கு-இலட்சியம் ஆகியனவற்றை உட்கொண்டு, இவற்றையும் ஏற்கத் தயாராகின்றோம். புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்கள் இரண்டு உலகங்களின் 'மாயை' களிலே வாழுகின்றார்கள். புதிய பொருள் வசதிகளின் மயக்கத்திலே, பாரம்பரியத்தின் வளத்தினைமறப்பது போன்ற அவதியும்! அவர்களுக்குச் சரியான கலாசாரத் திசைகளையும் விழுமியங்களையுஞ் சுட்டிக் காட்டுவதற்கு ஒரு தமிழ்ச் சஞ்சிகை தேவை. அந்தத் தேவையைப் பூர்த்தி செய்யும் பூபாளமாக 'அக்கினிக் குஞ்சு'வை வெளியிடுதலும் ஒரு புனிதப் போராட்டமே! எனவே கஷ்டங்களும் நஷ்டங்களும் நாம் எதிர்பாராதவையல்ல. ஆனாலும், இந்த இன்னல்களையும் இழப்புகளையும் பங்கிட்டுக் கொள்ளும் செயல்வீரர்களின் எண்ணிக்கை விரிவடையும் என்பதுடன், அவர்களுடைய ஈடுபாடு ஆழமானதாகவும் அகலமானதாகவும் வளரும் எனவும்எதிர்பார்த்தோம். 'அக்கினிக் குஞ்சு' வின் சேவையை வாய் மணக்கப் பாராட்டுவதுடன் நின்றுவிடாது, அதிக இதழ்களைச் செலாவணி செய்யும் முயற்சியிலே சத்திய அன்பர்கள் சிலர் ஈடுபட்டுள்ளார்கள். அவர்களுடைய அக்கறையும் ஊழியமும் நிச்சயம் 'அக்கினிக் குஞ்சு'வை வளர்த்தெடுக்கும் ஆகுதியாகப் பயன்படும் என்பதை நினைத்துப் பேருவகை அடைகின்றோம். பணி வளர்க; கூட்டத்தின் எண்ணிக்கை பெருகுக.

அடுத்தது, 'அக்கினிக் குஞ்சு'வின் தமிழ் நடையைப் பற்றிய ஒரு குறிப்பு. இதன் தமிழ் நடை எளிமையானதாகவும், மலிவானதாகவும் இருத்தல் வேண்டும் என்று பல அன்பர்கள் அபிப்பிராயந் தெரிவித்துள்ளார்கள். அவர்கள் 'அக்கினிக் குஞ்சு' வின் வளர்ச்சியில் அக்கறை உள்ளவர்கள் எனபதையும் நாம் அறிவோம். கொடுந்தமிழிலும், பண்டிதத் தமிழிலும் நமக்குக் காதல் இல்லை. அதே சமயம் நாம் ஒரு விஷயத்தைதெளிதல் அவசியம். 'தமிழிலே எளிமையைப் பெய்தல் வேண்டும், சாதாரண ரிக்ஷாக்காரனும் புதினம் வாசிக்க வேண்டும்' என்கிற இயக்கத்தினை 'தினத்தந்தி' மூலம் ஆதித்தனார் மேற்கொண்டார். விளைவு: ''சதக்'' ''சதக்'' என்று குத்தினான்!!!' போன்ற தமிழ் வளர்ந்தது. அவருடைய 'புண்ணிய'த்தினால் இன்று 'மெட்றாஸ் பாஷை' சினிமாவிலே கூடக் கொடிகட்டிப் பறக்கின்றது! பத்திரிகையின் பெயரால், எளிமையின் பெயரால், தமிழ்ச் சோரப் படுத்தவும் நாம் விரும்பவில்லை. எளிமை நன்று, வரவேற்கின்றோம். எளிமை என்னும் பெயரால், ஈழத் தமிழின் செழுமையை சோரப்படுத்தாமல் இருப்பதிலும் நாம் சுவனமாக இருத்தல் வேண்டும். இன்னும் ஒன்றையும் நீங்கள் கவனித்தல் வேண்டும். 'அக்கினிக் குஞ்சு' புதினப் பத்திரிகை அல்ல. பத்திரிகையின் ஆசிரியர் குழாத்தினால்,அதனை மலினப்படுத்துதலும், எளிமை என்ற பெயரால் கொச்சைப் படுத்துதலும் சாத்தியமானதே. 'எப்படியும் பணம் பண்ணுதல் வேண்டும்' என்கிற 'திவ்விய' நோக்குடன் வெளிவரும் 'குமுதம்' போன்ற சஞ்சிகைகள் 'கூலிக்கு மாரடிக்கும்' ஒரு எழுத்தாளர் பட்டாளத்தை வைத்துக் கொண்டு இந்தத் 'தொண்டி'னைச் செய்தலும் சாத்தியமே. ஆனால், 'அக்கினிக் குஞ்சு' வர்த்தக நோக்கங்களை முதன்மைப்படுத்தி வெளிவரும்சஞ்சிகையல்ல. அதன் நோக்கம் தூய்மையானது. அதன் இலட்சியம் சத்தியமானது. இதைக் கருத்துக்களை, 'குழாயடி'த் தமிழிலே சொல்லுதல் சாத்தியமானதா? கருத்துக்கு ஏற்பவும், அது கொண்டுள்ள சத்தியத்திற்கு ஏற்பவும் நடைகள் வேறுபடலாம். எழுத்து நடைகள் எழுத்தாளருடைய தனித்துவங்கள் சார்ந்தனவும். சுதந்திரப்பிரேமிகளான நாம் எழுத்தாளர்களுடைய சுதந்திரத்திற்கும் தனித்துவத்திற்கும் மதிப்பளித்தல் வேண்டும்.

இன்னும் ஒன்று. உருவம், பொருள், நோக்கம், தொனிப் பொருள், மொழி அறிவு ஆகிய பலவும் எழுத்து நடையைப் பாதிக்கும். வகைகளும் வண்ணங்களும் வரவேற்கத்தக்கன.

ஈழ எஸ். பாண்டியன்



படிப்பகம்

www.padippakam.com

நமது ஈழத்துத் தமிழ் இலக்கியப் பூங்காவில் 'நூறு மலர்கள் மலரட்டும்' என்கிற தாராள மனப்பான்மை 'அக்கினிக் குஞ்சு'வுக்கு உண்டு. இந்த வண்ணங்களையும் வகைகளையும் கொண்டுவந்து சேர்த்தல் நமது எழுத்தாளர்களுடைய அக்கறைகளையும் ஆக்கங்களையும் பொறுத்தது. அக்கினிக் குஞ்சுவின் குறைபாடுகளுக்கு நாம் பொறுப்பு ஏற்றுக் கொள்கின்றோம். பொறுப்புகளை ஏற்றல் வீரனுக்கு அழகு. அதன் செழுமைகளுக்கு நீங்கள் பொறுப்பேற்க முன்வருதல் வேண்டும் என்பதுதான் நமதுஆசை. இந்த ஆசையை நிறைவேற்ற நீங்கள் முந்துதல் வேண்டும் என்று நாம் மனசார வேண்டுகின்றோம்.

புலம் பெயர்ந்துள்ள இலக்கியவாதிகள் பலர் எழுத்துத் துறையைத் துறந்தவர்களாக வாழுகிறார்கள். அவர்கள் மீண்டும் எழுதுதல் வேண்டும். மேலும் சிலர் தமது முழுத் திறனையும் வெளிப்படுத்தும் வகையில் எழுதுதல் வேண்டும். புதிய எழுத்து ஆர்வங்கள் அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும்; ஊக்குவிக்கப்படுதல் வேண்டும். உண்மை. ஒரு வழி ஆசை மலடு. உங்களிடமிருந்தும் பிரதிபலிப்பு வேண்டும். இரு கைகள் சேர்ந்தாற்றான் தாளம் பிறக்கும். நாம் நேச கரம் நீட்டுகின்றோம். சங்கையான தமிழ்த் தாளத்தை எழுப்பும் பணியிலே உங்கள் கரங்களை நீட்டி உதவுங்கள். நேசம் பல நல் விளைவுகளின் முன்னோடியுமாம்!

**வணக்கம்**


**3-ம் பக்கத் தொடர்**

பூந்தளிர்களின் பிஞ்சு நெஞ்சங்களின் ஏக்கம் நெடியது. அவர்கள் சொர்க்கத்திற்கு 'விஸா' கேட்கவில்லை. சொந்த நாடுகளின் துன்பங்களில் இருந்து மீண்டு, அகதிகளாகப் புலம் பெயர்ந்து, புதிய வாழ்க்கை அமைத்துக் கொள்ள 'விஸா' எதிர்பார்த்து ஏங்கி நிற்கிறார்கள். சிறார்களுள் பௌத்தரும் உண்டு; கிறிஸ்தவர்களும் உண்டு.

அவர்களுக்கு விடிவும்கிட்டவில்லை. 'விஸா' வும் கிடைக்கவில்லை. அவர்களை அடைத்து வைத்திருக்கும் நெடுங்கதவுகள் பூட்டப்பட்டே இருக்கின்றன.... எப்பொழுது திறக்கும்? □

**9-ம் பக்கத் தொடர்**

களைப் பார்க்கின்றனர். ஒவ்வொருவருடைய பிரதிபலிப்புகளும், அபிப்பிராயங்களும் பிரதானமானவையே.தேசம் முழுதும் ஒன்று சேர்ந்து, ஐக்கியத்துடன் உழைக்கவேண்டிய பணியொன்று இருக்குமேயானால், அப்பணி, நிச்சயமாக தேசிய கல்வித் திட்டத்தைத் தயாரித்தலாகத்தான் இருக்கும். □



நூல் பதிப்பித்தல்
மற்றும்
அச்சு வேலைகள்
ARPrints
375-8 Arcot Road
Kodambakkam
Madras-600 024 INDIA
Call;P.P.420011



படிப்பகம்

www.padippakam.com

# தாயக மண்ணில்

**நம்** நினைப்புக்கும் நாட்டு நடப்புக்கும் உள்ள இடைவெளி வர வர இந்துமாக் கடல் அளவுக்கு விரிவடைந்து கொண்டு இருக்கிறது.

தாயக மண்ணில் நடந்து வரும் நிகழ்வுகளைக் கவனித்தால் நமக்கு அப்படித்தான் நினைக்கத் தோன்றுகிறது.

'அக்கினிக்குஞ்சி'ன் கடந்த இதழில் தாயக மண்ணின் நடப்புகளை எழுதிய போது தமிழீழப் பிரச்சினையில் ஒரு திருப்பம்ஏற்பட எங்கோ ஓர் ஆரம்பத்துக்கு பிள்ளையார் சுழியிடப்படும் என்றநம்பிக்கைஏற்பட்டிருந்தது. நாம் நம்பியபடி எதுவும் நடக்கவில்லை. அப்படி நடக்கும் என்ற நம்பிக்கையிலும் இப்போது மண் விழுந்துவிட்டது.

தாயக மண்ணில் உள்ள தமிழ்மக்களின் கஷ்டங்களுக்கோ இப்போதைக்கு விடிவு ஏற்படும் என்று தோன்றவில்லை. அவர்களும் களைத்து சோர்ந்து போய் விட்டார்கள். களத்தில் இருப்பவர்கள் அவர்கள். எவ்வளவு காலம்தான் சோதனைகளுக்கு தாக்குப் பிடிப்பது என்ற அயர்ச்சிஅவர்கள்மத்தியில் தலை தூக்கத் துவங்கி உள்ளது.

இத்தனைக்கும் இதே மக்கள்தான் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் போராடுவோம் என்ற உறுதியுடன் இருந்தவர்கள். ஆனால் இப்போது இனி எத்தனை நாளைக்குத் தான் செத்துச் செத்துப் பிழைப்பது என்று நொந்து கொள்கிறார்கள்.

வடக்கு, கிழக்கிலிருந்து கொழும்பு நோக்கி வருபவர்களிடம் பேசிப் பார்த்ததில் இந்த விரக்தி நிலையை புரிந்து கொள்ள முடிகிறது. எப்படியோ தமிழ் ஈழத்திலிருந்து தலைநகர் கொழும்புக்கோ அல்லது நாட்டின்இதர பகுதிக்கோ இப்போது அதிக சிரமமின்றி சென்று வர முடிகிறது என்பது ஆறுதல் தரும் சங்கதி.

இலங்கை அரசுக்கும் ஈழப் புலிகளுக்குமான பேச்சு வார்த்தைஇலங்கைக்கு வெளியே எங்கேனும் துவங்கப்படக் கூடும் என்று நாம் எதிர்பார்த்தது நடக்கவில்லை.

இந்தியாவின் அடுத்த பிரதமர் பதவிக்கு வரக்கூடியவர் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்ட ராஜீவ் காந்தி தமிழ்நாட்டில் சென்னைக்கு அருகில் மகா கொடூரமான முறையில் வெடிகுண்டின் மூலம் படுகொலை செய்யப்பட்ட பிறகு அதிலும் இப்படு கொலையில் ஈழப் போராளிகளுக்கு சம்பந்தம் இருக்கும் என சந்தேகம் பிறந்து விட்ட நிலையில் இலங்கை அரசு ஈழப் புலிகளிடம் பேச்சு வார்த்தை நடத்த தயங்குகிறது

ராஜீவ் படுகொலையில் தங்களுக்கு எந்த சம்பந்தமும் கிடையாது என்று ஈழப்புலிகள் எத்தனை முறை மறுத்தாலும் இலங்கை அதனை நம்புகிற மாதிரி இல்லை. எனவே புலிகளுடன் பேச மாட்டோம் என்று அது சொல்லிவிட்டது. புலிகளுடன் பேசாமல் வேறு யாருடன் பேசுவார்களாம்? பேச்சு வார்த்தை என்ற பேச்சுக்கே இப்போதைக்கு இடமில்லை என திட்ட வட்டமாக அது கூறி விட்டது.

அடுத்து காய்கள் எப்படி நகர்த்தப்படும்என்று தோன்றவில்லை. ஈழப் பிரச்சினைக்கு எப்படியாவது ஒரு முடிவு கண்டு விட்டால் நல்லது என்ற ஆர்வம் அதிபர் பிரேமதாசாவுக்கு இருந்தது உண்மை. கடந்த மாதம் இரண்டாவது வாரத்தில் நடந்த உள்ளாட்சி மன்ற தேர்தல்களில் அவரது ஐக்கிய தேசியக்கட்சிக்கு கிடைத்த மகத்தான வெற்றி அவரது சிந்தனையை மாற்றி இருந்தால் ஆச்சரியம் இல்லை. மிஞ்சிமிஞ்சிப் போனால் தமிழ் ஈழப்பிரச்சினைக்கு அதிகபட்சம் கூட்டாட்சி அமைப்பின் அடிப்படையில் தீர்வு ஏற்படுத்தும் அளவுக்கு அவரது சிந்தனையில் மாற்றம் ஏற்பட்டிருந்தது என விவரம் அறிந்தவர்கள் சொல்கிறார்கள். அதாவது தனித்தமிழ் ஈழத்துக்கு பதிலாக மாநில சுயாட்சி -மத்தியில் கூட்டாட்சி என்ற அளவுக்கு ஈழத்தமிழ் மக்களுக்கு உரிமை வழங்குவற்குக் கூட அவர் தயாராகத்தான் இருந்தார் என்கிறார்கள்.

இப்போது என்ன வந்ததாம்?

ஆனால் தமிழீழப் பிரச்சினை விஷயத்தில் முடிவு அவர் கையில் மட்டும் இல்லை. ஈழப்பிரச்சினை என்பது ஒரு வகையில் சர்வதேசப் பிரச்சினையாக்கப்பட்டு விட்டது. எனவே தேசியத்தீர்வுஎதுவும்எடுபடாது. எனவே என்னதான் தீர்வு என்பதற்கு காலம்தான் பதில்சொல்ல வேண்டும்.

இந்தியாவில் ராஜீவ் காந்தி அடுத்த பிரதமர் பதவிக்கு வந்திருந்தால் ஈழப்பிரச்சினை புது வடிவம் எடுக்கும் என எதிர்பார்த்தவர்கள் ஏராளம். ஈழப் பிரச்சினையில் வேகம் மிகுந்த இந்தியாவின் ஒரே ஒரு தேசியத் தலைவர் அவர்தான். இரண்டு லட்சம் ஈழ அகதிகள் இந்திய மண்ணில் வைத்துப் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள் என்பது



படிப்பகம்

www.padippakam.com

கூட தெரியாத நிலையில் இதர தலைவர்கள் இவர்களிடம் என்ன எதிர்பார்ப்பது?

ராஜீவ் படுகொலைக்குப் பிறகு ஈழப்பிரச்சினையில் ஒரு பின்னடைவு ஏற்பட்டுள்ளது. அவரது படுகொலைக்கு அமெரிக்க உளவு நிறுவனம் தான் காரணம் என்பது பலரது எண்ணம்.

இந்திய பொதுத் தேர்தலுக்கு முன்னரே அவரைத் தீர்த்துக்கட்ட சி. ஐ. ஏ ஜனவரியிலே திட்டம் தீட்டி அதற்கு இறுதி வடிவமும் கொடுத்திருந்ததாம்.

அந்தத் திட்டத்தை புத்திசாலியான ஓர் உளவாளி மிகவும் சாமர்த்தியமாக நிறைவேற்றி தமிழீழப் போராளிகள் மீதே சந்தேகம் விழுகிற மாதிரி செயல்படுத்தி இருப்பதாக ராஜீவ் படுகொலை தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டிருக்கும் புலனாய்வுத் துறை அதிகாரிகள் நினைக்கின்றார்கள்.

சி. ஐ. ஏ யின் திட்டம் நிறைவேற இந்தியாவிலும் கூட தெரிந்தோ தெரியாமலோ பலர் உதவி செய்து இருக்கிறார்கள். வரும் தேர்தல் ஜூன் நடுப்பகுதியில் முடிவடைந்ததும் சர்வதேச பின்னணி கொண்ட பல இந்தியர்கள் கைது செய்யப்படலாம் என்று எதிர்ப்பார்க்கப் படுகின்றது. ராஜீவ் படுகொலையில் ஈழப் புலிகளுக்கும் சம்பந்தம் உண்டு என்று நம்பும் இலங்கை அரசு, படுகொலை தொடர்பான புலன்விசாரணைகளில் இந்தியாவுக்கு முழு அளவில் உதவி வருகின்றது.

ராஜீவை குண்டு வைத்துக் கொன்றவள் என்று நம்பப்படும் பெண், அவளுக்கு உதவி செய்ததாக கருதப்படும் வேறொரு மர்ம இளைஞர் ஆகியோர் படங்களை அது ரூபவாகினியில் ஒளிபரப்பியது. பத்திரிகைகளில் விரிவாக வெளிவரச் செய்தது.

பிறகு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விமானம் மூலம் அப்படங்களை மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் தூவியது. படத்தில் உள்ளவர்களை அடையாளம் காட்டுவோருக்கு தக்க சன்மானம் தரப்படும் என்ற அறிவித்தலையும் தனி முக்கியத்துவத்துடன் அது வெளியிட்டு வருகின்றது.

மே மாதம் என்றாலே இலங்கையில் விரிவான முறையில் கொண்டாடப்படும் மேதின விழாவும் தேசிய பண்டிகையான, வெசாக்கும் நினைவுக்கு வராமல் போகாது. கடந்த சில ஆண்டுகளுக்குப் பிறகு மே தின விழாவும் வெசாக் பண்டிகையும் இலங்கையில் மிகக் கோலாகலமாக கொண்டாடப்பட்டதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

வெசாக் பண்டிகையையொட்டி மூன்று தினங்களுக்கு தமிழீழத்தில் போர் நிறுத்தத்தை இலங்கை அரசு தன்னிச்சையாக அமல் செய்தது. முதல் நாள் எல்லாம் சரிதான். ஆச்சரியப்படும் படியான அமைதி நிலவியது உண்மை தான். ஆனால் அடுத்தடுத்து வந்த தினங்களில் வட்டியும் முதலுமாக சேர்த்து படுகொலைகள் தொடர்ந்தன. இன்னமும் தொடர்கின்றன.

வட, கிழக்கில் துப்பாக்கிக் குண்டுகளுக்கு உயிர்கள் பலியாகிக் கொண்டிருந்த அதே நேரத்தில் தென் இலங்கையில் கோரப் புயல் மழை, வெள்ளத்துக்கு 40 பேர் வரை பலியாகி விட்டனர்.

ஒரு வார காலம் கடும் மழையும் காற்றும் தென்னிலங்கையில் கோரத் தாண்டவமாடி விட்டுத்தான் ஓய்ந்தது. அடடா! என்ன மழை, என்ன காற்று. தலை நகரிலேயே கூட பல மரங்கள் சரிந்து விழுந்து தந்திக் கம்பங்கள், மின்சாரக் கம்பிகள் அறுந்து வாழ்க்கையை நரகமாக்கி விட்டது.

கடந்த 16 ஆண்டுகளுக்குப் பிறகு மழையும் காற்றும் சீறிச் சீறி அடித்தது இதுவே முதல் தடவை. கொழும்பில் தாழ் நிலங்கள் வெள்ளக்காடாகி விட்டன.

தென்னிலங்கையில் கரையோரப் பகுதிகள் நிலை இன்னும் மோசம். குறிப்பாக களுத்துறையிலிருந்து அம்பாந்தோட்டை வரை பல இடங்களில் கடலரிப்பு ஏற்பட்டு கடல் நீர் ஊருக்குள் புகுந்து விட்டது.

எதிர்பாராத நேரத்தில் மழை நீரும் கடல் நீரும் சேர்ந்து கொண்டு மூர்க்கத்தனமாகத் தாக்கியதில், வீடு வாசல்களை இழந்து ஆயிரக்கணக்கில் மக்கள் அகதிகளாகி விட்டனர். பலரை ஆற்று வெள்ளம் அடித்துச் சென்று விட்டது. ஆட்களையே அடித்துச் சென்று விட்ட வெள்ளம் ஆடு மாடுகளை விட்டு விடுமா?

மொத்தத்தில் தென் பருவப் பெயர்ச்சிக் காற்றால் தென்னிலங்கையில் ஏற்பட்ட அனர்த்தம் அதிகம் தான்.

மகிழ்ச்சிக்குரியதாக ஏதேனும் அகப்படாவிட்டாலும் குறைந்த பட்சம் மனதுக்கு ஆறுதல் தருகிற ஒரு தகவலுடன் 'தாயக மண்ணில்' செய்திகளை முடித்துக் கொள்ளலாம் என்று விரும்பினேனாயினும் அதற்கு வாய்ப்பே இல்லாது போயிற்று. அடுத்த இதழிலாவது பார்க்கலாம்.

**–கார் முரளீதரன்**

---

## இந்த இதழில்

ஈழத் தமிழரின் அரசியல் ;
ஒரு சாட்சியம்,
நேசம் நாடும் நெஞ்சங்கள்
ஆகிய தொடர் கட்டுரைகள்
பிரசுரமாகவில்லை. அடுத்த
இதழில் வெளிவரும்.

**-ஆர்**



படிப்பகம்

www.padippakam.com

வெள்ளிக் கிழமை
விடிந்து சிரிக்கிறது
உள்ளம் இரண்டு தனி
உலகியலை ஆய்கிறது

ஐந்து தட்டு மாடியிலே
அந்தரத்தில் நிற்கின்றேன்
அந்தரங்கத் தந்தரத்தில்
அப்பாலே பார்க்கின்றேன்

சூரியர்கை வைகறையில்
சுவாலேறாக் காரணத்தாற்
சேருமிடம் எங்கணுமே
சேர்ந்தணையும் மென்கரங்கள்.

மென்கரங்கள் தாவுகையில்
மேனி குளிர்ந் துயிர்த்துப்
பன்னிறமென் கொட்டினங்கள்
பால முறுவலிட்டார்.

□

# -கவிஞர் அம்பி

## பப்புவா நியுகினி

பால முறுவலுடன்
பாதையிலே நின்றவரின்
கோலஞ் சுவைத்துணரக்
கொடுத்து வைத்தோர் யாரு
மில்லை

பேச்சுவரா மக்களவர்
பெருவேக யந்திரங்கள்
பாய்ச்சல் நடையின்று
பாதை தொடருகிறார்

பாதை நெடும்பாதை
பலகணியில் பார்க்கையிலே
ஆதியந்த மில்லாமல்
அதுவுந் தொடர்கிறது

□

ஆதியந்த மில்லாத
அந்தநெடும் பாதையிலே
மோதிவிழுந் தாயிரம் பேர்
மூச்செறிந்து செல்கின்றார்

விடிந்தும் விடியாமல்
வீதியிலே நிற்பவரைத்
தொடர்ந்த கலியெண்ணிச்
சொப்பனங்கள் காணுகிறேன்.

தந்தைதாய் சேயென்ன
தாரம் இருந்தென்ன
அந்தரத்தில் வாழுகிற
அந்த வுலகமொன்று

குழந்தை அழுதென்ன
குட்டிநாய் குரைத்தென்ன
உளந்தளராச் சால்புடைய
உலகியலை ஆய்கின்றேன்.

□ □ □

ஊசலின் அலைவுக் கீர்ப்ப
உள்விசை ஆமாம் ஓடித்
தேசமெஃ தலைந்தும் உண்மை
தெளிவுறா மனிதா சிச்சீ
ஆசையின் பலியா இல்லை
அகவியல் மறந்தேன் ஓய்ந்த
தாசி போல் மனமீ டாடித்
தவிக்கிறாய் விடுநீ என்றேன்.

□

விட்டனன் என்று மெல்ல,
விழிக்கடை விரித்தேன் பாடும்
தட்டிலே ஊரும் ஊசி
தன்வழி தவறா தேகிக்
கிட்டியம் மையந் நாடிக்
கிறுகிறுப் போய்தல் போலப்
பட்டதென் மனதில் மெல்லப்
பகலவன் தொட்ட கோலம்.

□

பலகணி வழியே பார்த்துப்
பசியடங் காத தாலே
அலைபுரள் வீதி ஓரம்
அடக்கமாய்ச் சென்று நின்றேன்.
கலகல வென்று பேசிக்
கலந்திட வேளை யில்லா
உலகரின் போக்கில் எந்தன்
உளத்தையும் தொடுத்து நின்றேன்.

□

ஓடுமீன் ஓடிச் செல்ல
ஒன்றுவந் தணையு மென்று
வாடிநான் நின்றேன் ஆமாம்
வாயிலே சுங்கா னோடு



தேடிநான் நின்ற தெய்வம்
தெருவிலே வந்தாற் போல
தாடியைத் தடவிக் கொண்டே
சங்கரப் பிள்ளை வந்தார்.

□

சங்கரப் பிள்ளை மாஸ்டர்
தமிழ்ப்புலி சைவ ஞானி
எங்களுக் கந்த நாளில்
எழுத்தறி வித்த ஆசான்
பொங்கிய ஆர்வத் தோடே
பொடியனைச் சேர்த்தக் காலம்
சங்கமொன் றமைத்துச் சைவம்
தமிழெனத் துடித்த சீமான்.

□

கோயிலொன் றமைத்தார் ஆனால்
கும்பிடச் சிலபேர் சென்றால்
வாயிலை மறித்து நின்றும்
வழிப்பறி செய்த துண்டு.
நாய்புகுந் தோடும் வேளை
நலிவுறாப் புனிதம் நம்மோர்
போய்வரம் கேட்டு நின்றால்
போயவிடும் என்ற நெஞ்சம்.

□

வெண்ணிற வேட்டி சால்வை
விரிந்திடா முறுவற் செட்டு
பண்ணொலி வடியும் நாவில்
பலவகை நெறிகள் ஆயும்
கண்ணில்எக்ஸ் கதிர்கள் காதில்
கடுக்கனில் துளைக ளோடு
விண்ணிலே தலையை நீட்டி
வீதியிலே நடந்த சீமான் **-தொடரும்**



படிப்பகம்

www.padippakam.com

# தேசீயக் கல்வித் திட்டம்

## —கலாநிதி

**கால் நூற்றாண்டுகளுக்கு முன்னர் இந்தக் கல்விமான் தெரிவித்த கருத்துகள் இன்றும் சிந்திக்கத் தக்கன. -ஆர்**

ஒரு நாட்டிற்கு ஒரு வகைக் கல்விமுறை ஏற்புடைத்தாக இருக்கலாம்; ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பிறிதொரு கல்விமுறை ஏற்புடைத்தாக இருக்கலாம். இருப்பினும், அதேகல்விமுறை இன்னொரு நாட்டிற்கோ, இன்னொரு சகாப்தத்திற்கோ தகுந்ததாக அமையமாட்டாது. ஏனெனில், ஒவ்வொரு நாட்டினதும், ஒவ்வொரு தலைமுறையினதும் சமூக-பொருளாதார-கலாசார அறைகூவல்களை யேற்று, அவற்றிற்குத் தீர்வு காணக் கல்வி விழைகின்றது. அஃது இயக்க சக்தி மிக்கச் செயற் கிரியையாகும். கல்வியின் பரிமாணமும், அதனை மாணாக்கருக்குப்புகட்டும் நிருவாக அமைப்பும் எப்பொழுதும் புனருத்தாரணஞ் செய்யப்படுகின்றன. அவை நாளதுவரைக்கும் பொருத்தமானவையாக அமைக்கப் படுகின்றன. இருப்பினும், கல்வியின் சில குறிப்பிட்ட நோக்கங்கள் அனைத்துலகமானவை. அவை நித்தியமானவை. மனிதன் எங்கேயாவது, எப்பொழுதாவது சமுதாயத்தின் அங்கமாக வாழ்ந்தபோதெல்லாம், அவனுடைய நேரத்தினதும் கவனத்தினதும் பெரும் பகுதியை ஈர்ந்த சங்கதி ஒன்றுண்டு. அது, சமுதாய அமைப்பிற்கு இசைந்தொழுகவும் சுற்றாடலைப் புரிந்து அதனை வசப்படுத்தி வாழவுந் தன் சந்ததியைப் பயிற்றுவித்தல் என்பதாம் பழக்க வழக்கங்களையும், தடை விதிக்கப்பட்ட செயல்களையும், பாரம்பரியக் கதைகளையும், நாடோடிப் பாடல்களையும், வேட்டையாடுதல் அல்லது விவசாயஞ்செய்தல் ஆகிய தொழில்களையும் சம காலச் சமூகத்திற்குத் தேவையெனக் கொள்ளப்பட்ட மற்றுஞ் செய்திகளையும் தன்னுடைய பிள்ளைகளுக்கு கற்பிப்பதற்கு அவனை உந்திய நோக்கங்களையும், ஆசைகளையும் அவன் சேதன பூர்வமாக அறிந்திருக்கவில்லை. இருப்பினும், தற்காலப் பெற்றோரும், கல்வித்திட்டங்களை வகுப்போரும் தேசிய கல்வித் திட்டத்தைப் பற்றிச் சிந்திக்கும் அதே சுவட்டிலேதான், அவன் கூட அடிப்படையிற் சிந்தித்திருக்கிறான்.

தேசீய கல்வி திட்டம் என்பது பரந்த சொற்றொடர். வாழ்க்கைக்கும், அதன் கடமைகளுக்கும் தன் இளைஞரைப் பயிற்றும் பொருட்டு, ஒரு நாடு கைக்கொள்ளும் முழு நிருவாகத்தையும் அது குறிக்கும். பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றையும், அவற்றின் மூலம் போதிக்கப்படும் கல்வியையும், நிருவாக அமைப்புகளையும் அஃது உள்ளடக்கும். எந்தத் தேசீயக் கல்வித்திட்டமும் பின்வரும் மூன்று முக்கிய குறிக்கோள்களைப் பூர்த்தி செய்யும் நோக்கமாக அமைதல் வேண்டும்.

(அ) தேசத்திலுள்ள ஒவ்வொரு குழந்தையும், எவ்விதபாரபட்சங்களுக்கும்உட்படுத்தபடாமல் அடிப்படைக் கல்வி பெறல் வேண்டும். இதன் மூலம், அதிக விளக்கத்துடனும், ஆற்றலுடனும், பிரசை என்னுந் தனது கடமையை நிறைவேற்ற, மொழி-எண் ஆகியவற்றிலே அடிப்படைத் திறமையைப் பெறுகின்றான்.

(ஆ) ஒவ்வொரு குழந்தைக்கும் அதனுடைய சுய ஆற்றல்களுக்கும், மனப்போக்குகளுக்கு மேற்பப் பயிற்சி பெறுஞ் சந்தர்ப்பமளிக்கப் படல் வேண்டும். இதன் மூலம், நாட்டின் சமூக-பொளாதார அபிவிருத்தியிலே தன் பங்கினை அளிக்க அவன் தயாராகுகின்றான்.

(இ) ஒவ்வொரு குழந்தையுந் தன்னுடைய மத- ஆன்மீக- கலாசார பாரம்பரியத்தை விளங்கி அதனை உரிய முறையில் மதித்தல் வேண்டும். அத்தகைய அறிவும்,மதிப்பீடும்,சமுதாயத்தின் தார்மீகசேமலாபத்தை உறுதிப்படுத்துவதுடன்,அவனிடத்திலே நாட்டுப்பற்று-தேசீயப்பற்று ஆகிய உணர்வுகளை வளர்க்கின்றன.

தற்கால இலங்கையின் அரசியல்-சமூக-பொருளாதார நிலைகளுக்கேற்றதான தேசீயக்கல்வித் திட்டத்தை தயாரிக்கும் பொழுது, இலங்கையிலுள்ள நாம்கூட, இந்த நோக்கங்களை ஏற்றுக் கொள்ளுகின்றோம். அமுலிலுள்ள கல்வித்திட்டம் எவ்வளவுதான் பிழையானதாகவும், பயனற்றதாகவும் இருந்தபோதிலும் அதனை மாற்றியமைத்தல் சுலபமானகாரியமன்று. மாற்றம் என்றதுமே, அது பலருக்கு வெறுப்பூட்டுவதாக அமைகின்றது என்பது ஒரு புறமிருக்க,கல்வியிலேற்படும்மாற்றங்கள் ஒரு முழுத் தலைமுறையையே சீமைப் பெருச்சாளிகளாக்குந் தன்மைத்தாக அமையலாம். இது பெரும்பாலும் அவர்களுடைய எதிர்காலத்தையும் பாதிக்கின்றது. எனவே, கல்விச் சீர்திருத்தங்கள் நிதானமானதாக இருத்தல் வேண்டும்.பகட்டான திடீர்மாற்றங்கள் சிபாரிசு செய்யத்தக்கன அல்ல. செயல் அனுட்டானத்திற் கொண்டு வரத்தக்கன அல்ல. கல்விச் சீர்திருத்தங்கள், தேசம் முழுவதும் பங்குபற்றும் மெதுவான, திட்டமிட்ட செயற்கிரியையாக அமைதல் வேண்டும். ஒவ்வொருவரும் பெற்றோர் -ஆசிரியர்- மாணாக்கர் ஆகிய தனது சுய நிலைக்களனில் நின்றே கல்விப் பிரச்சினை

-5ம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் கடிதம்



பிலிப்பா மக்கின்ரோஷ்

அகதிகள் ஆலோசனை -மனுப்பணிச்சபை (RACS), அவுஸ்ரேலியாவிலே தஞ்சம் புகும் ஆயிரக் கணக்கானோருக்கு, பல்வேறு வழிகளிலும் உதவி செய்கின்றது. அனைத்து ஆலோசனைகளையும் சேவைகளையும் இலவசமாக வழங்குகின்றது. சிட்னியிலே துவங்கிய அரசு நிறுவனமில்லாத இந்த உபகாரச்சபையின் கிளைகள் தற்பொழுது மெல்பேனிலும், அடலையிட்டிலும் திறக்கப்பட்டுள்ளன. 1988ஆம் ஆண்டு தொடக்கம் இதன் இணைப்பதிகாரியாகப் பணி புரியும் **செல்வி பிலிப்பா மக்கின்ரோஷ்** சிறந்த கலை-இலக்கிய ஆர்வலர். கீழைத்தேய நாகரிகங்கள் பற்றிப் புலமையுள்ளவர். புலம்பெயர்ந்த ஈழத் தமிழரின் கலாசாரத் தனித்துவத்தைப் பேணும் முகமாக **அக்கினிக் குஞ்சு**வை வெளியிட நாம் திட்டமிட்ட பொழுது, பல ஆக்கபூர்வமான ஆலோசனைகளை நல்கியவர். இன்றும் அதன் வளர்ச்சியிலே கருத்தூன்றி உதவுகின்றார். அவருடைய வாழ்த்தின் மூலக் கடிதத்தினை இங்கு பிரசுரிப்பதில் மகிழ்கின்றோம்.

**REFUGEE ADVICE AND CASEWORK SERVICE**
**(R.A.C.S.)**

Phone: (02) 212 2188

CHANGE OF ADDRESS
69-71 Parramatta Rd.
Camperdown 2050
Locked Bag 15, Camperdown P.O. 2050
Telephone: (02) 565 9111
Fax: (02) 550 4509

Pasadena House
86-90 Bay Street
Broadway NSW 2007
P.O. Box K359
Haymarket
NSW 2000

The Editor
Akkini Kunchu

Dear Sir

I write to congratulate you on this fine magazine. I was, to a small extent, involved in its planning stages, and so have a personal and enthusiastic interest in its success.

RACS has advised hundreds of Tamils in the past three years - many have become friends and supporters of its workers. Having seen the determination of the Tamil community to maintain its cultural identity in spite of the fact that so many Tamils are now displaced throughout the world, Akkini Kunchu is a valuable link between displaced Tamils everywhere.

I am particularly pleased that Australia was the country of its birth, and wish it a long and successful future.

Yours faithfully

Philippa McIntosh
Co-ordinator RACS (NSW)

A SERVICE OF THE REFUGEE COUNCIL OF AUSTRALIA

"வீடும் வீதியும்" நாடகத்துள் நீங்கள் 'தமிழச்சி தரிசனம்' கண்டீர்கள். இதனால், படைப்பின் இலக்கு நிறைவேறியுள்ளதென உவகையுற்றேன். இரண்டாவது இதழின் தலையங்கம் மிகவும் அற்புதம்.

**-க. கலாமோகன்** பிரான்ஸ்

தேய்ந்து போன தமிழ்ப் பேச்சும்
தென்றலோடு ஓடி மறைந்த
தமிழ்ப் பண்பாடும் நிலைநாட்ட
வந்திடும் குஞ்சு...

**-எம். எஸ். ராஜா**
தோமஸ் டவுண்

தமிழ்ப் பத்திரிகை தர்மம் அக்கினிக் குஞ்சு மூலம் ஒளிர்கின்றது. அக்கினிக் குஞ்சுவில் என்னைக் கவர்ந்த பகுதி 'ஈழத் தமிழர் அரசியல் : ஒரு சாட்சியம்' எழுதுபவர் : அபிமன்யு. இப்படியான அறிவை வளர்க்கும் மாந்தர்கள் நூறு வயது வாழ வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

**-றொபின்**, டென்மார்க்

"அக்கினிக் குஞ்சே!"
உன்னை ஈன்ற இந்த நாள்,
இன்று,
பொலிவுடன்,
விடிந்ததைக் கண்டாயா?
மலர் தூவ வாழ்த்தும்,

**-நவம் முகுந்தன்**, அமெரிக்கா

உல்லாச வேளை தமிழ் நாட்டில் இருப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தியது.

**கே. மகேந்திரன்**, லண்டன்

கும்மிடிப் பூண்டி விசிட், இந்தியாவில் உள்ள, ஈழத் தமிழர் அகதிகள் பற்றி தெரியாத விஷயங்கள் நிறையவே இருந்தன. தொடர்ந்து பல அகதி முகாம்கள் பற்றி வெளியிட்டால் எம் போன்று வெளி நாட்டில் வாழ்பவர்களுக்கு மிக பயனாக இருக்கும். **- நவம் அரவிந்தன்**
ஜேர்மனி

தாவடிப் புகையிலையை வாயில் போட்டு நடையைக் கட்டிய (அசை போட்டுக் கொண்டே) வரிகள் நன்றாக இருந்தது. அகதி முகாமிலுள்ள நிலைமைகளை கட்டுரை படம் பிடித்துக் காட்டியது.

**-குமரகுரு**
கனடா



படிப்பகம்

www.padippakam.com



## புதுக்கவிதை

### ஓர் ஈழப் போராளிக்கு ஒரு காதலியின் கடிதம்

# துப்பாக்கி எப்போது பூப்பூப்பது?

கவிஞர்
வைரமுத்து

அன்பனே!

உன்
தோழியை விட இப்போது
துப்பாக்கியை நேசிக்கும்
தோழனே!

**என்னோடு**
**மெழுகுவத்திகளும்**
**அழுது கொண்டிருக்கும்**
**இந்த**
**மெல்லிய இரவில்**
**கடிதத்தில் விழுகிறது**
**கண்ணீர்ச்சொட்டு**

கடிதத்தில் அழிவது
மெல்லினமும் வல்லினமும் தான்
கண்ணீரில் அழிவது
தமிழினமே அல்லவா?

**நாங்கள்**
**நட்சத்திரங்களைப் பார்த்து**
**நாளாயிற்று**
**எங்கள் வானத்தைப்**
**புகை மண்டலம்**
**போர்த்தியிருக்கிறது!**

மனிதன் மட்டும்தான்
சிரிக்கும் ஜீவராசியாம்
அப்படிப் பார்த்தால்-
இப்போது இங்கு யாரும்
மனித ராசி இல்லை!

**காதலா!**
**நீயும் நானும்**
**ரகசியமாய் நடந்து போகும்**
**ராத்திரிச்சாலை**
**இப்போது-**
**வெடிகுண்டுகளின்**
**விதைப் பண்ணையாகி**
**விட்டது!**

மரணத்திற்கு இங்கு யாரும்
வருந்துவதில்லை!
இலையுதிர்காலத்து
இலைகளுக்கு
இரங்கற்பா எதற்கு?

**இனியவனே!**
**என்**
**வாலிபத்தை**
**வாசித்தவனே!**

உனக்கு
என் நினைவுகள்வந்ததுண்டா
எப்போதாவது?

**இருக்காது**
**துப்பாக்கி எப்போது**
**பூப் பூப்பது?**

ஆனால்
என் தலையணையருகே
சில
உலகக் காவியங்களும்
உன் நினைவுகளும் தவிர
ஒன்றுமே இல்லை!

**இப்போது**
**கல்யாணத்தை நான்**
**காதலிக்கவில்லை**
**ஆனால்**
**பிள்ளை பெற்றுக்கொள்ள**
**பிரியப்படுகிறேன்!**

ஏனென்றால்-
ஈழ யுத்தத்திற்கு
இன்னுமோர் போராளி தேவை

**அடிமை ஈழத்தில்**
**தம்பதிகளாய் இருப்பதைவிட**
**சுதந்திர ஈழத்தில்**
**கல்லறைகளாய் இருப்போம்!**



படிப்பகம்

www.padippakam.com




அந்த யாழ்ப்பாணத்துக் கிராமம் தன்னுடைய சுறுசுறுப்பை இழக்கின்றது. பொழுது சாய்ந்து இரவு புகுந்து விட்டது.

தாய் அடுப்படியில் வேலையாக இருக்கிறாள்.

படிப்புப் பராக்கில் மேசையருகில் அமர்ந்திருந்த மகள், "விளக்கு வைச்சு எவ்வளவு நேரமாப் போச்சுது. எங்கை அம்மா தம்பி?'' என்று கேட்கிறாள்.

"அவன் புள்ளை நாலஞ்சு நாளாய் நாண்டு கொண்டு நிண்டான் படத்துக்குப் போக வேணும் எண்டு. கொய்யாவின்ரை குணம் தெரியாதே. அவர் வந்தால் அவனாலை ஒருஇடமும் உசும்பேலாது. அதுதான் போட்டுவரட்டுமெண்டு விட்டனான். பத்து மணிக்கிடையிலை வந்துடுவான். பாவம், அவனுக்கும் மற்ற மற்றப் பொடியளைப் போலை ஆசை இருக்குந்தானே?''

"உதென்னணை, நெடுக அடுப்பெடிக்குள்ளை இருக்கிறாய்.?''

"உன்ரை படிப்பைக் கெடுக்கலாமே? கொய்யாவுக்கு நான் சுடுற தோசை எண்டால் நல்ல பிரியம். அங்கை மனிஷனுக்குக் கடைச் சாப்பாடுதானே. அதுதான் உழுந்து ஊறப்போட்டனான். அதை ஒருக்கா அரைக்கப் போறன்.''

'சிங்கார வேலா...' என்ற பாட்டைச் சீழ்க்கையடித்து வீட்டுப் படலையை ஒரு உருவந் தாண்டியதை மகள் அறிவாள். சந்தேகமில்லை, அது 'சிங்கார வேலா' பாட்டுத்தான்.

"வயித்தைக் கலக்குது... ஒருக்காக் கக்கூசுக்கு போட்டு வாறன்''— என்று தனக்குத் தானே சொல்வதைப் போல, தாய்க்கும் கேட்கக் கூடியதாக மகள் சொல்கிறாள்.

"எதுக்கும் கைவிளக்கை எடுத்துக் கொண்டு போ பிள்ளை......''

□ □ □

"இஞ்சேரும். நாளைக்கு ஐயா கொழும்பிலையிருந்து வாறார். ஏதேன் நினைப்பிலை என்னைப் பார்த்துச் சிரிச்சிடாதையும். ஒழுங்கையாலை சீக்காய் அடிச்சுக்கொண்டு போகாதேயும். அவர் சரியான சமுசியக்காறர்.'' என்று மிக இரகசியமான குரலில் மகள் தன் காதலனிடம் சொல்லுகிறாள்.

"உனக்கு ஐயா எண்டால் எனக்கு அவர் மாமா தானே? உன்னை எனக்குக் கட்டித்தரச் சொல்லிக் கொய்யாவைக் கேக்கப் போறன்:...''

"ஆளைப் பாருங்கோவன்......வந்து கேட்டால் விளக்குமாத்துக் கட்டைத்தான் எடுத்துத் தருவார். நான் கதைக்கிற எண்டு தெரிஞ்சாலே கொண்டு போடுவார்...... உங்களுக்கு நெடுகச் சேட்டைதான். கார் ஓட்டிற பழக்கத்திலை நெடுக இதிலை தனகிறதுதான்......''

"கொய்யா வந்தால் பாக்கக் கூடாது, பேசக்கூடாது எண்டெல்லாம் சொல்லுநீர்......அப்ப கெதியா வாருமன்......''

"அம்மா வந்தாலும் வந்திடுவா...... போதுமப்பா, போதும்......''

..................

"நான் உங்களைத் தான் கட்டுவன். இது சத்தியம்.''

"அப்ப இன்னும் படிக்கப்

—கே. வி. நடராஜன்

போறனெண்டு சொன்னீர்?''

"ஐயா படிக்கச் சொல்லுறதாலை படிக்கிறன், சும்மா படிக்கிறதாலை என்ன கெட்டு போகுது.''

"என்ன, போனவளை இன்னும் காணம்...... புள்ளை, புள்ளை'' —அடுப்படியிலிருந்து தாயின் குரல் கேட்கிறது.

"வந்திட்டனம்மா......நான் வாறேன். நீர் கெதியாப் போயிடும்.''

காதலன் கதிகாலால் ஏறி, வேலியைத் தாண்டி மறைகின்றான்.

அந்த இளங் காதலர்களின் சல்லாபத்தைக் கண்ணாற் கண்ட வேலி பெருமூச்சு விடுகின்றது.

□ □ □

"இதிலை இருப்பம். வீட்டுக்கை வேண்டாம். பொடியன் படத்துக்குப் போட்டு வந்து நல்ல நித்திரைதான். ஆனால், பொடிச்சிதான் இருமி இருமிக் கொண்டு கிடக்கிறாள் அவள் பக்குவப்பட்ட பிள்ளையல்லே......'' என்று தாய் சொல்லுகின்றாள், தன்னை மறந்த இன்பத்திற் கிணற்றுக் கட்டில் சாய்ந்து கொண்டே.

"ஐயா வந்தால், எத்தினை நாளைக்கு இஞ்சை நிப்பார்?''

"ஒரு கிழமை லீவு எடுத்துக்



படிப்பகம்

www.padippakam.com

**வேலி கதை பற்றி...**

**யாழ்ப்பாணக் கலாசாரத்தின் அடிப்படை முரண்பாடுகள் சிலவற்றைப் புதிய கோணத்திலே நோக்கி ஈழத்துச் சிறுகதைத் துறைக்கு வளமூட்டியவர் கே.வி.நடராஜன். அவருடைய சிறுகதைகளின் தொகுப்பாக யாழ்ப்பாணக் கதைகள் வெளி வந்தது. அதில் இடம் பெற்ற கதைகளுள் ஒன்றே வேலி. உருவகக் கதைக்குரிய ஒ ந போக்கினையும் கலவை செய்து எழுதப்பட்டுள்ள 'வேலி' கால் நூற்றாண்டுக்கு முற்பட்ட யாழ்ப்பாணத்தின் ஓர் அவலத்தினை அச்சாவாகச் சித்திரிக்கின்றது.**

-ஆர்

கொண்டு இஞ்சை வாறாராம். அதுதான் இண்டைக்கு கட்டாயம் வர வேணுமெண்டு சொன்னனான்.''

''இந்த வருசமும் நீர் சொல்லி, எனக்குத்தான் உங்கடை மரங்களை வாங்கித் தர வேணும்.''

''உனக்கு இல்லாமல் வேறை ஆருக்கு அவர் குடுப்பார்....... வேறை ஆருக்கேன் குடுக்க நான்தான் விடுவேனே?...... இது என்ரை சீதன வளவல்லே...... நல்ல வடிவாக் கட்டிப் பிடியும்......''

..................

''ஓம், போயிட்டுவா, புள்ளையும் இருமிறாள். இஞ்சை, நாளைக்கு ஐயா நிப்பார். பத்து மணி போலை ரெண்டுபோத்தில் பனங்கள்ளுக் கொண்டு வந்து குடும். பாவம், அது கொழும்பிலை ஒண்டும் தொடுறேல்லே... இஞ்சை வந்தாத் தான்...''

''எனக்கு அம்மா சொல்லவேவேணும். ஒவ்வொரு கோசும் ஐயாவுக்கு குடுக்கிறனான் தானே?''

அவன் வேலியைத்தாண்டிச் செல்கின்றான்.

வீட்டு எஜமானியம்மாளின் சல்லாபத்தையும் நேரிற் கண்ட வேலி மீண்டும் ஒரு பெருமூச்சு விடுகின்றது.

□ □ □

**அடுத்த** நாள் பத்து மணி இருக்கும். ஐயா வந்து விட்ட கலகலப்பு, வீட்டிலே விரவிக் கிடக்கிறது.

ஒரு தடியை எடுத்து, வேலியிலுள்ள கறையான்களைத் தட்டிக்கொண்டிருந்த ஐயா, ''வேலியும் நல்லா உக்கிப்போச்சுது போலை கிடக்குது'' என்று சொல்லுகிறார்.

''ஓமப்பா... புள்ளையும் கடுக்கண்டிட்டுது. ரெண்டு வரிச்சு மேலாலை உயத்தி அடைக்கத் தான் வேணும். அடுத்த மாதம் சின்னச்சீட்டின்ரை காசு வரும்'' என்கிறாள் தாய்.

பரம்பரை பரம்பரையாக யாழ்ப்பாணத்துக் கௌரவத்தைக் காப்பாற்றி வரும் அந்த வேலி. தான் ஓரடி இன்னும் வளரப் போவதைப் பற்றிச் சந்தோஷப் படவில்லை. அது மீண்டும் ஒரு தடவை பெருமூச்செறிந்து, யாழ்ப்பாணத்துக் கௌரவத்தைக் காப்பாற்றுங் கருமத்தை இயற்றிக் கொண்டிருக்கிறது. □

---

**சிந்தையிலே ஆறு சிவப்பு தினம்**

**ஜனன்**

**டென்மார்க்**

**சிலராய், பலராய்,**
**சுற்றமாய், உற்றாராய்,**
**செத்து மடிந்தவர்கள்**
**நினைவுகளில் நிற்காது**
**இருளில் மறையும்**
**நிழலாய் ஆயினர்,**
**என்றோ எங்கோ**
**மானுடத்திற்காய்மரித்ததனால்**
**ஆண்டுகள் பலசெத்தும்**
**சிக்காக்கோவில் நீங்கள்**
**சிந்திய ரத்தத்தின்**
**சிவப்பு மட்டும்**
**சிறிதும் மங்காது**
**இன்றும் இன்னும்...**
**சிவப்பாய்...**
**சிந்தையில் நிலைக்கும்.**

---

**அறுவை**

**மணமகள் தேவை:**

45 வயதுடைய உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகத் தொடர்புடைய, திருமணமான வர்த்தகப் பிரமுகர் ஒருவருக்கு (life partner) ஆக இருந்து உதவுவதற்கு **பதிவுத் திருமணம்** செய்து கொள்ள விருப்பமற்றவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். ஜாதி, மதம், குலம்,வயது கவனிக்கப் படமாட்டாது....

—பத்திரிகை விளம்பரம்.

□ பொழிப்பு: ஒரு வைப்பாட்டி தேவை!
இதற்கு ஈழத் தமிழ் தேசிய தினசரி தொண்டு செய்கின்றது.

**ராஜ்மித்ர**



படிப்பகம்

www.padippakam.com

மே 1991

அக்கினி-1 குஞ்சு - 4

# நமது கலாசார யாகம் !

'மனிதன் சுதந்திரமாகப் பிறக்கின்றான்; சுதந்திரம் நமது பிறப்புரிமை'-என்று அரசியல் ஞானிகள் தந்துள்ள கோஷங்கள் இனிப்பானவை. ஆனால், வலியரின் ஆதிக்கப் பேராசைகளினால், தமது உரிமைகளுக்காக மெலியர் போராடுதல், உலகின் நிதர்சனமாகும். இன்றைய ஈழம் இந்த நிதர்சனங்களுள் ஒன்று. போராட்டத்தின் ஓரம்சம் புலம் பெயர்தலும். ஈழத் தமிழராகிய நாம் அதற்கான திருட்டாந்தங்கள்! தாயகத்திலே, சமராலோ அன்றேல் சமரசத்தாலோ, சுமூகச் சூழல் ஏற்பட்டால், மீண்டும் சொந்த மண்ணிற்குச் சென்று வாழ விரும்புவர்கள் நம்முள் எத்தனை பேர்? வரட்டு வாதம் வேண்டாம். மனச்சாட்சியைத் தொட்டு பதில் சொல்லுங்கள்; மீளச் செல்வதற்கு இடைப்பட்ட ஒரு தற்காலிக ஏற்பாடா உங்கள் புலம் பெயர்வு?

நாம் மேற்கொண்டுள்ள பிரதேச வாழ்வு நம்மிலே ஏற்படுத்தும் மாறுதல்களை உரிய முறையிலே உணர்கின்றீர்களா? புதிதாக ஏற்படும் பொருளாதார-கலாசார- சமூகவியல் இடைவெளிகள் நிரந்தரமாகிவிடுமா? நம்மை விடுங்கள். நாளை நமது பிள்ளைகளுடையது. புலம்பெயர்ந்துள்ள நாடுகளே நமது பிள்ளைகளின் சொந்த நாடுகளாகியும் விடலாம். அப்பொழுது அவர்களுடைய பாரம்பரிய கலாசார விழுமியங்கள் எவையாக இருத்தல் வேண்டும்? இவை பற்றி ஆழ்ந்து சிந்தித்தல் பெற்றோருடைய தலையாய கடமையல்லவா?

இரண்டு உலகங்களிலும் ஒட்டாத 'திரிசங்கு' நிலையில், ஒரு மயக்க நிலையில், புதிய பொருள் வசதிப் போதையில், நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்கள் சந்ததியை இருளிலே தள்ளிவிடும் ஆபத்தினை உள்ளடக்கி இருக்கின்றன, என்பதை உங்களாலே உணர முடிகிறதா? சுயநல வேட்கைகளுக்கு அப்பாலும், மனிதன் ஒரு சமூகப் பிராணி. பிஞ்சு நினைவுகளும், பழைய தொடர்புகளும், நம்முள் ஊறியுள்ள பண்பாட்டுக் கோலங்களும், இழந்துவிட்ட சமூக வாழ்வை ஈடுகட்ட நமக்குப் போதுமானவையாக இருக்கலாம். இவை நமது பிள்ளைகளுக்குக் கிடைக்கப் போவதில்லை. இருப்பினும், அவர்கள் தமது வயதை ஒத்த சுதேசிய-வெள்ளைக்கார-சினேகிதர்களுடன் பழகி, அவர்களுடைய அநுபவங்களை பகிர்ந்து, அந்தக் கலாசாரத்துள் வாழ நமது பிள்ளைகள் முயலுதல் தகாது என்பதிலே நாம் கண்ணும் கருத்துமாக உள்ளோம். ஒதுங்கிப்போகும் இந்தப் பண்பால், நமது பிள்ளைகள் சமூக வாழ்வே அற்ற ஏகாந்த உலகிலே சஞ்சரிப்பதை விரும்புவீர்களா? நமது பிள்ளைகள் நிரந்தர 'சைக்கோ'க்களாகவும் மனநோயாளர்களாகவும் மாறுவதை எந்தப் பெற்றோரும் விரும்பமாட்டார்கள் என்பது திண்ணம்.

புலம் பெயர்ந்து, புது நாடுகளிலே வாழும் நாம் நமது கலாசார வாழ்வை எப்படி கட்டியமைக்கப் போகிறோம்? முதலில், நமது வாழ்க்கையை எந்த வகையிலும் பிரதிபலிக்காத இந்திய தமிழ் சினிமா- வீடியோ கலாசார மயக்கத்திலிருந்து நாம் விடுதலை பெறுதல் வேண்டும். இந்த சினிமாக்களும், வியாபார-விபசார இலக்கியங்களும் ஈழத்திலும் செய்த சீரழிவுகள் இங்கும் நம்மைத் தொடர அனுமதித்தல் ஆகாது. மாறாக, நமது கலாசாரப் பாரம்பரியங்களும் விழுமியங்களும் புதிய வேகத்துடனும் வீறுடனும் கட்டி எழுப்பப்படுதல் வேண்டும். அதுவே நமது எதிர்காலச் சந்ததியின் முதுசொமாக நிவேதிக்கப் படுதல் வேண்டும். பழைமையின் பரிணாம வளர்ச்சி சார்ந்து புதுமைகள் பூத்தலும் சங்கையானதே.

நமது கலாசார மாளிகையைப் புதிய மண்ணிலே நிறுவுவதற்கு முதலில் வலுவான அத்திவாரந்தேவை. சிறார்களும் விளங்கக் கூடிய-விரும்பக்கூடிய கலை நிகழ்ச்சிகள் நம்மவர் மத்தியில் மலிதல் அவசியம். தமிழ் போதிக்கும் கல்வி நிலையங்கள் மொழியறிவைத் திணிக்கும் கருவிகளாக மட்டுமே செயல்படலாகாது. அவை கலைக்கூடங்களாக மாறுதல் வேண்டும். அங்கு கலாசார நிகழ்ச்சிகள் பொலிதல் வேண்டும். ஈழத் தமிழ்க் கலாசார நிகழ்ச்சிகளை, சமூக வாழ்வை (நமது பிள்ளைகள் வேகமாக இழந்து வரும் ஒன்றை) வழங்கும் சக்தி வழிபாட்டு யாகங்களாக ஓம்புதல் வேண்டும். அப்பொழுது தான், நாம் நமது பிள்ளைகளையும் அவர்களுடைய எதிர் காலத்தையும் புந்தியில் போற்றும்பெற்றோர்களாக வாழ்வோம். அன்றேல், நமது சுகவாழ்வுக்காகப் பிள்ளைகளைப் பட்சிக்கும் அரக்கர்களாக மாறுவோம். ஓர் இனத்தின் அழிவைத் தடுக்கத் தொடுக்கப்படும் போரைப் போன்றே, இப்பணியும் மகா புனிதமானது.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழே

**24-2-91 அன்று சிட்னியில் நடைபெற்ற இலக்கிய விழாவிலே அக்கினிக் குஞ்சுவின் முதல் இதழ் அறிமுகம் நிகழ்ந்தது. அவ்விழாவில் அரங்கேறிய 'தமிழ் மோகம்' என்ற கவிதையின் சில பகுதிகள் இங்கு பிரசுரமாகின்றன. அ. சந்திரஹாசன் சிட்னியில் அமைந்துள்ள தமிழ் கலை-இலக்கியப் பேரவையின் தலைவராவர்.**

காலத்தின் கோலத்தாலோ இல்லை
கோளாற்றாலோ
காசு பணம் பண்ணுதற்கோ எதற்கோ ஏதோ
ஞாலத்தில் எங்கோ பிறந்து இங்கோர் மூலை
சேர்ந்தோம்.

பழையன பல கழிந்தன பாதைகள் மாறின
புதியன புகுந்தன புரியாமலேயே

காரென்ன புதுசோ பழசோ
மொடல் என்ன இயர் என்ன
கலர் என்ன பவர் என்ன
கனகாலம் நிக்குமோ
வீடு வாங்கி யாச்சோ
விலை என்ன விஸ்தீரணம் என்ன
வெக்கைக்கு ஏத்த விதத்தில் கட்டியதோ
பக்கத்து வீட்டார் பரவாயில்லையோ

கேட்டுச் சொல்லி அலுத்த போதும்-வாய்ப்
பாடாய் போன வாசகங்கள் இவை
கேட்கும் சொல்லும் முகங்கள் வேறு வேறு
ஆனால் கேள்வியும் பதிலும் ஒன்றானதாலே
எங்கள் முகத்தை நாங்கள் இழந்தோம்.

இந்த இயந்திர உலகில்
நாங்கள் இழந்துவிட்டது
முகத்தை மட்டுமல்ல
ஆத்மாவையும் தான்!
சுற்றங்கள் வேறாகி சுகங்களும் மாறி
சூடாக்கி குளிராக்கி சுகந்த மணம் பரப்பி
வேறாக்கி ஒன்றாக்கி விந்தைகள் புரிந்து
விளங்காத கேள்விகட்கு வினாடியில் விடை தந்து
சோறாக்கி கறியாக்கி சுறுக்காக தருகின்ற
மாயாவி இயந்திரங்கள் சூழ்ந்த மாநகரில்
பேயாகி போகாமல் பிறந்தெம்மை ஆட்கொள்ள
ஆர்தான் வருவாரோ?

இந்த இயந்திர உலகில்
நாம் இழந்து விட்டது
முகத்தை மட்டுமல்ல
ஆத்மாவையும் தான்!

சின்ன வயசில் சிறு குடில் கட்டி
அம்மன் கணபதி அழகிய முருகன்
படங்களை ஒட்டி பகட்டாய் பூக்களால்
மாலைகள் செய்து தோரணம் கட்டி
பழைய வாளிகள் சட்டிகள் மாறி
ஐந்து கூட்டம் மேளமாய் முழங்க
மினுங்கும் பேப்பரில் சப்பரம் செய்து
வீதி எங்கும் ஊர்வலம் சென்றோம்.
இன்றோ சிறுவர் இங்கொரு மூலையில்
பொத்தானை அழுத்த வித்தைகள் காட்டும்
விளையாட்டு இயந்திர கருவியில் நுளைந்து
களையாமல் தமது பொழுதை போக்குவர்.

இந்த இயந்திர உலகில்
நாம் இழந்துவிட்டது
முகத்தை மட்டுமல்ல
ஆத்மாவையும் தான்!

இவ்வாறே வாழ்க்கை வாய்ப்பாடாகி
நேர அட்டவணையின் நியதிப்படியே
வாரம் மாதம் வருஷங்கள் எல்லாம்
மாற்றமில்லாது வந்து போகும்
வேளையில் ஒருநாள்.
இலக்கிய விழாவொன்று இங்கு சிட்னியில்
ஏதாவது பேச முடியுமா என்றனர்
தமிழ் மொழியில் பற்றுமில்லை
பாசமும் இல்லை வெறியும் இல்லை
பற்று பாசம் வெறி கொள்ள

பாசை ஒன்றும் தசையே அல்ல.
உள்ளத் திருக்கை உள்ளவாறு சொல்ல
உருவகப் படுத்தி அழகாய்ச் சொல்ல
ஊடகமாக உதவி செய்யும்.
அவ்வளவு தான். ஆனால்,

வற்றிப் போன இந்த வெற்றுடலுக்குள்ளே
தொற்றிக் கொண்டு துயரத்தை அறுத்து
பற்றுப் பாசம் என்ற பல்வகை உணர்வுகளை
ஊற்றுவிக்கும் வல்லமை இந்த
தமிழுக்கு எப்படி வந்தது என்பது
புரியா தெனக்கு
ஆனால் இதுவோ உண்மை.

என்று என் பேனா எடுத்து
இனிய தமிழில் எழுத முனைந்து
பழைய நினைவில் மூழ்க முடிந்ததோ
அன்றே என்னுள் ஒன்றை உணர்ந்தேன்.
என்றோ இந்த இயந்திர உலகில்
இழந்து விட்ட எனது முகம்
மீண்டும் தோன்றும் விந்தை கண்டேன்.
அத்தோடு கூட அடகு வைத்த
ஆத்மா என் அருகில் வந்து
இந்த வாழ்வின் அர்த்தம் சொல்லும்.

அ. சந்திரஹாசன்



படிப்பகம்

www.padippakam.com

# ஈழத் தமிழர் அகதி முகாம்



## 3 திருச்சி உள்ளிட்ட ஏழு மாவட்ட அகதி முகாம்கள் பற்றிய சில விபரங்கள்

### நவம்

**திருச்சியில்** ஏழு மாவட்டங்களுக்கான தலைமை அலுவலகம், OFERR ன் கீழ் இயங்கிவருகின்றது. திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை, பசும்பொன், திண்டுக்கல், மதுரை, காமராஜர் மாவட்டங்களே அந்த ஏழும். திருச்சி அலுவலகப் பொறுப்பாளராக திரு. **எஸ். ஜேசுரத்தினம்** பணிபுரிகின்றார். திரு. ஜேசுரத்தினம் இலங்கைவானொலியிலும், அங்கு தயாரான சில சினிமாக்களிலும், நடித்துள்ள ஓர் அருங் கலைஞர். இவருக்கு உதவியாக திரு. **பி. மாணிக்கவாசகர்** (முந்நாள் கணக்காளர்) நிதிப்பிரிவைக் கவனித்து வருகின்றார். இருவருமே மிகத் துடிப்புடன் செயல்பட்டு வருவதைக் கவனிக்க முடிந்தது. அலுவலகத்தை படு சுத்தமாகவும், ஒழுங்காகவும் வைத்துள்ளார்கள்.

தங்கள் கீழுள்ள 7மாவட்டங்கள் பற்றியதகவல் அனைத்தும் அத்துப்படி. எந்த கேள்வி கேட்டாலும் 'பட்பட்' என்று பதில் வருகின்றது.

அலுவலகச் சுவர்களில், தம் கீழுள்ள 7 மாவட்டங்களின் வரை படங்களையும், மாட்டி அவற்றில் எங்கெங்கே முகாம்கள் உள்ளன என்ற விபரங்களையெல்லாம் அழகாக-பிசிறில்லாமல் -குறித்து அடையாளமிட்டிருந்த ஒழுங்கு, நம்மை மிகவும் கவர்ந்தது. தம்முடைய 'கொடுவா' மீசையை கைகளால் நீவிவிட்டுக் கொண்டு மடமடவென்று மனப்பாடமாக விபரங்களைச் சொல்லத் தொடங்கினார், திரு. ஜேசுரத்தினம்.

திருச்சி அலுவலகத்தின் மேற்பார்வையில் இயங்கும் 7 மாவட்டங்களுக்கும் 7 தொண்டர்கள் பொறுப்பாவுள்ளனர். 25க்கு மேற்பட்ட தொண்டர்கள் முகாம்களுக்கு பொறுப்பாக உள்ளனர்.

திருச்சி மாவட்டத்தில் மட்டும் 15 முகாம்கள் உள்ளன. இவற்றில் மொத்தம் 759 அகதிகள் உள்ளனர். இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள்:

1. 15 முகாம்களுக்கும் வாசகசாலைகள்
2. 14 முகாம்களுக்கு விளையாட்டு உபகரணங்கள்
3. 5 முகாம்களில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு பால்மா வினியோகம்.
4. 12 முகாம்களுக்கு சத்துணவு-மருத்துவ வசதிகள் மற்றும் 1-4-91 தொடக்கம் திருச்சியிலுள்ள எல்லா முகாம்களுக்கும் சத்துணவு தயாரிக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதுபோல் ஏனைய 6 மாவட்டங்களுக்கும் இத்திட்டம் விரைவில் ஆரம்பிக்கப் படவிருக்கிறது.

இந்த சத்துணவுத் திட்டத்தால், கற்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், முதியோர்கள், ஊனமுற்றோர், மற்றும் மருத்துவ சிபார்சு பெற்றோரும் பயனடைவர்.

கல்வியை பொறுத்தவரையில் 9-12 ம் வகுப்பு மாணவர்களுக்கு குறைந்த கட்டண பஸ் சலுகை, பால் என்பன வழங்கப் கப் படுகின்றன.

பெண்களுக்கு தையல் மெஷின், அம்மி. ஆட்டுக்கல்

### ஈழத்துக் கல்வி வளர்ச்சி-4

1841-ம் ஆண்டில் ஸ்வருட் மக்கன்ஸி என்னுந் தேசாதிபதி மத்திய பாடசாலைகள் ஆணைக்குழுவை நிறுவினார். இத்துடன் இலங்கையின் கல்விக் கொள்கையில் அரசாங்கம் பூரணமாகத் தலையிடத் தொடங்கி விட்டது எனலாம். தீவில் வளர்ந்து வரும் தேவைகளுக்கு ஏற்பவும்,மக்களுடைய தேவைக்குஏற்பவும் சிறந்த கல்வி அளிப்பது அரசாங்கத்தின்அடிப்படைக் கடமைகளுள்ஒன்று என்பது நிலைபெறலாயிற்று.

முதன் முதலாகக் கல்வி சம்பந்தமாகச் சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட சட்டம், 1884- ம் ஆண்டில் நிறைவேறிய 33 எண் சட்டமாகும். இதனை விரிவுபடுத்தும் வகையில் 1906-ல் நகர பாடசாலைகள் சட்டம் எண் 5-ம் 1907-ல் கிராமப் பாடசாலைகள் சட்டம் எண் 8-ம் நிறைவேற்றப்பட்டன. இந்தச் சட்டங்கள் பலவாக இருந்தமையினால், பல குழப்பங்களேற்பட்டன. இந்தக் குழப்ப நிலைகளைப் போக்கும் முகமாக, 1920-ம் ஆண்டில் கல்விச் சட்டம் எண்1 சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது. இது முக்கியமான ஒரு சட்டமாகும். முந்திய சட்டங்களைப் போலல்லாமல், இஃது எல்லா இலங்கைக்கும் அமுலாயிற்று. **-கல்விமான்**



படிப்பகம்

வழங்கப்பட்டுள்ளன. இவை தற்போது சில முகாம்களுக்கே இது விஸ்தரிக்கப்படும்.

இவற்றைக் கண்காணிக்கவும் வழி நடத்தவும் ஒவ்வொரு முகாமிலும் நலன் புரிச் சங்கங்களும், மகளிர் சங்கங்களும் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

இவற்றிலுள்ள குறைபாடுகள் தேவைகளை திருச்சி அலுவலகத்துடன் நேர் முகமாகவோ, தொண்டர்கள் மூலமோ தொடர்பு கொண்டு நிவர்த்தி செய்து கொள்ளலாம். மருத்துவம் சம்பந்தமாக ஒவ்வொரு முகாமிலும் மருத்துவ சேவையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்,

1-4-91 தொடக்கம், இலங்கை மருத்துவ அதிகாரிகளைக் கொண்ட ஒரு மருத்துவப் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. □

அடுத்த இதழில் ஓர் அகதி முகாமைப் பார்வையிட்டு எழுதுகிறேன். -நவம்



1. திருச்சி அலுவலகத்தில் ஆலோசனைக் கூட்டம். கலந்து கொண்டோர்: செல்வி சூரிய குமாரி (செயலாளர்) திருவாளர் எஸ். ஜெகரத்தினம் பி. மாணிக்க வாசகர் (செயற் திட்ட இணைப் பாளர்)



2. திருச்சி வாழவந்தான் கோட்டை முகாம் அகதிச் சிறார் பால் விநியோகம்: எஸ். கி. சந்திரகாசன் (பொருளாளர்)




26




படிப்பகம்

www.padippakam.com

# சிறுகதை

## மாத்தளைசோமு



**ரயில்** வந்து நின்றதும், காந்தன் அவசரமாக ஏறிக் கொண்டான். அவன் அவுஸ்ரேலியாவில் அகதிகளாகக் குடியேறியுள்ள ஈழத் தமிழர்களுள் ஒருவன்.

இதற்காக அவன் பெரியப்பாவுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். என்ஜினியரான அவர் கைநிறையச் சம்பளத்துடன் கொழும்பில் வேலைபார்த்தார். விதியோ, அன்றேல் தரகர் கணபதிப் பிள்ளையின் திருவிளையாடலோ? கொழுத்த சீதனத்துடன் 'டமிள்' பேசும் பணக்காரியை மணம் முடித்து, அவரும் 'கொழும்பானா'க மாறிவிட்டார். 1983 ஆம் ஆண்டின் இனப்படுகொலையின் போதுகூட, அதிட்ட தேவதை அவர் பக்கலிலே நின்றாள். இழப்புகள் எதுவும் இல்லை. 'கொழும்பான்' என்று கொக்கரிக்க முடியாத அவதி. மனைவியின் அண்ணன் அவுஸ்ரேலியாவில் குடியேறி வாழ்ந்தார். அவருடைய தூண்டுதலினாலும் sponsor - ship இனாலும், குடும்பத்துடனும் 'மூட்டைமுடிச்சு'களுடனும் குடியேறி, மெல்பனில் வாழத் தலைப்பட்டார். வசதி வழிந்தது. பெரியப்பாவுக்கு உடம்பெல்லாம் மச்சம் என்று சொல்வார்கள்!

மாறாக, அவனுடைய அப்பா பல்கலைக் கழக புகுமுக வகுப்பு மாணாக்கனாய் இருந்த காலத்திலேயே, செங்கொடி தூக்கி சமத்துவ—சமதர்மக் கொள்கைகள் பேசத்துவங்கியவர். கொள்கைகளை வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற வெறியுடன் கலப்புத்திருமணஞ் செய்து, புரட்சி கண்டவர்! சொந்த உறவுகள் அறுந்த தனிவழி! மிடிமை கண்டு சிரித்தார். வீரம் மிகுந்த மேடைப் பேச்சுகள். தொடர்ந்தன. தமிழ் ஈழ அரசியலில் மேடைப் பேச்சுகள் குறைந்து, 'துப்பாக்கிகள்' பேசத் துவங்கின. காந்தனின் அண்ணன்மார் இருவர் ஒருநாள் 'காணாமற்' போய்விட்டார்கள். 'அப்பாவின் வழியில், அவருடைய புரட்சியை முன்னெடுத்துச் செல்வதற்காகவும், தமிழ் இனத்தின் விடுதலையைக் காண்பதற்காகவும் போராளிகளாகி விட்டோம்' என்று கடிதம் வந்தது. அம்மா அழுது பிரலாபித்தாள். அப்பா அழவும் இல்லை; சிரிக்கவும் இல்லை. 'அவங்கள் என்ரை பிள்ளைகள்' என்று மட்டும் சொன்னார். ஒருநாள் அப்பா ராணுவ 'ஜீப்'பில் ஏற்றப்பட்டார். அவர் அதுவாக, உடல் வீடு வந்து சேர்ந்தது. 'உண்மையை சொல்ல மறுத்துத் தற்கொலை செய்து கொண்டார்' என்று விளக்கம் தரப்பட்டது. சிங்கள ஆதிக்க வெறியின் சூக்குமங்களை அறியாத காந்தனின் தாய், கைம்பெண்ணாக, அவனையும் அவன் தங்கையையும் கஷ்டங்களுக்கு மத்தியில் வளர்க்கத் தலைப்பட்டாள். அவர்கள் படும் கஷ்டங்களினால், 'மழுவராயர் பரம்பரையின்மானம் கப்பலேறுவதாக' அவதிப்பட்ட உறவினர் ஒருவர், அவர்களுக்குப் பெரியப்பாவின் உறவை புதுப்பித்துக் கொடுத்தார். பெரியப்பாவின் சகாயத்தினால். காந்தனின் குடும்பம் அவுஸ்ரேலியாவில் அகதிகளாகக் குடியேறி, நிரந்தர வசிப்பிட அந்தஸ்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

'டமிள்' பேசும் பெரியம்மாவுக்கும், 'புறோக்கின்இங்கிலீசு'



படிப்பகம்

www.padippakam.com

பேசும் அம்மாவுக்கும் அரம்பத்தி லிருந்தே ஒத்துப் போகவில்லை. காந்தன் குடும்பத்தின் 'தமிழ்' பழக்க வழக்கங்களினால், தன் பிள்ளைகளின் AUSSIE வளர்ப்புச் சோரம் போவதாகப் பெரியம்மா நச்சரிப்பாள். பெரியப்பாவுக்கு உயர் ஜாதி வேளாள அரிப்பு எப்பவும் உண்டு. குடும்ப முரண் பாடுகளுக்குத் தீர்வு கஷ்ட மானதல்ல. காந்தன் குடும்பம் சிட்னியில் குடியேறியது.'டோல்' பணத்துடனும் ,'இரண்டு பேரும் உழைக்கும்' தமிழ்க்குடும்பங் களின் 'ஈழத்துணவு'ப் பரிமாறல் களுக்கு உதவி செய்வதால் கிடைக்கும் மேலதிக வருமானத் துடனும் காந்தனின் குடும்ப காலட்சேபம் நடக்கின்றது. பெரியப்பாவும் யோக்கியன்! மாதத்திற்கு ஒரு முறையாவது தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, இவர்களுடைய சேம லாபங்களை விசாரித்துக் கொண்டிருப்பது எவ்வளவு பெரிய ஆறுதல்? 'என்ரை ராசா, நீ ஊக்கமாக படிச்சாத்தான் எங் கடை குடும்பமும் விளங்கும்!' -இதுதான் அம்மாவின் அழுகை-கொஞ்சல்—பிரார்த்தனை சகல மூமாக இருந்தது.

ரயில் ஓடிக் கொண்டிருந் தது. பௌதிக புத்தகத்தைப் புரட்டினான். படிப்பில் மனம் ஒன்றவில்லை. பார்வையை ரயி லுக்கு வெளியே எறிந்தான். கரையிலே குத்திட்டு நின்ற மின் சாரக் கம்பங்களும், உயரிய பைன் மரங்களும், ஏனைய கறா ளை மரங்களும் நெடிதும்-குள் ளமுமான கட்டடங்களும்,தெருக் களும், அவற்றிலே விரைவு பயி லும் வாகனங்களும் எதிர்த்திசை யிலே ஓடுவது போன்ற ஜாலம். இயக்கம் தொற்றிய இயக்கங்க ளின் வியாபகம்!

நேற்றைய சம்பவங்கள்-எதிர்த்திசையில் ஓடுவனவற்றை போன்று - காந்தனின் மனத் திலே வலம் வந்தன.

# அத்தனை பேரும் நீக்ராமோ?

காந்தனும், அவன் நண்பன் வான் அங் ஹோவும், விளையாட் டுத் திடலுக்குக் குடை விரித்த மரம் ஒன்றின் கீழ் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். ஹோ ஒரு வகுப்பு மூப்பு; பன்னிரண்டாம் வகுப்புப் படிக்கிறான். இருவரும் அவுஸ்ரேலியாவுக்கு அகதிகளாக வந்து சேர்ந்தவர்கள். பேச்சிலும் பார்க்க, மௌனமான பார்வை கள் இருவருக்குமிடையில் நட்பை வளர்த்திருந்தது.அந்த நேரத்தில் அகமட் அங்கு வந்தான். அவன் லெபனானைச் சேர்ந்தவன். எப் பொழுதும் சத்தம் போட்டுப் பேசுவான். பிரின்சிபலோடும் அதே உரத்த குரல்தான். அது அவனுடைய ஆயுதம். அவனுக்கு நாற்று நட்டது போல மீசை. வயசையும் மீறிய வாலிப உணர்ச் சிகளுடன் நடந்து கொள்வதும் அவன் சுபாவம்.

பிரின்சிபல் கந்தோரில் 'கிளார்க்' ஆக இருக்கும் ஜூலி என்கிற வெள்ளைக்காரி அந்தப் பக்கமாக வந்தாள். அதீத ஒப்ப னைகள் அவள் வயதினை விழுங் கும். இளமை 'டாட்டா' காட்டு வதற்கிடையில், இன்னொரு 'கணவ'னை இழுத்துவிட வேண் டும் என்பது போல அலை பாயும் பார்வை. வளைவுகளை மேலும் வளைவாக்கி, தசைப் பிர தேசங்களிலே இளமைத் துள்ள லைச் செயற்கையாக அப்பிக் கொண்டு நடப்பாள். அவளு டைய 'ஒயி'லில் அகமட் 'கிக்' பெற்றிருக்க வேண்டும். அவன் விரசமாக விசிலடைத்து வரவேற் றான்!

காந்தனின் மனம் அடித்துக் கொண்டது. ஹோ முகத்தைச் சுழித்தான். ஜூலி திரும்பிப் பார்த்து முறைத்தாள். இருவரும் மெல்ல நழுவினார்கள். 'யூ கைஸ் ஆர் சிலி......' என்று சொல்லிச் சிரித்த அகமட், வேறு பக்கமாகத் திரும்பி நின்றான்...!

எதிரிலே புயல் போன்று வந்த ஹரிஸன், வெள்ளைத் தோலின் பெருமையைப் பாது காக்கும் தத்துவக்காரன் என்ற மிடுக்குடன், நடந்து கொண்டி ருந்த காந்தனையும் ஹோவையும் வழி மறித்தான். 'You dirty black.. you want to rape a white Woman....' என்று கத்திக் கொண்டே, ஹரி ஸன் காந்தனின் சேட்டைப் பற்றினான்.

ஹோவுக்குக் கோபம் வந் தது. அதனை அடக்கிக் கொண்டு சொன்னான்: "Learn to talk nicely... there is a saying; give respect and get respect..."

"You Asian worm... Are you trying to teach me?" என்று ஆக்ரோ ஷத்துடன் கூறிய ஹரிஸன், காந் தனை விலத்தி, ஹோ மீது பாய்ந்து, தன் பலம் முழுவதை யும் முஷ்டியில் ஏற்றி, அவன் தாடையில் இரண்டு குத்துகள் விட்டான். தாடையில் இரத்தம் கசிந்தது...

அவன் சிந்தனை அறுந்தது. எதிரில் அமர்ந்திருந்த இரண்டு சீனப் பெண்கள், உலகை மறந்து குறிப்பிட்ட ஒரு பதார்த்தஞ் செய்வது பற்றி சீன மொழியில் 'தாளித்து'க் கொண்டிருந்தார் கள்.

தனக்காகப் பேசி அடிபட்டு நின்ற ஹோவுக்கு உதவிக்குப்



படிப்பகம்

www.padippakam.com

போகாது மௌனியாக நின்ற அந்தக் கோழை நிலை அவனுடைய உள்ளத்தை அரித்தது... 'ஹோ, நீ எவ்வளவு இனிமையானவன்... சோகத்திலும் இனிமை சிந்தும் மலர் நீ...' ஹோவைப் பற்றிய நினைவுகள் அவன் மனதைப் பிசைந்தது... அந்தப் பிசைதலிலே, ஹோ தொட்டம் தொட்டமாகச் சொன்னவை, ஒரு வரலாறாக முகிழ்ந்தது.

ஹோ ஒரு கம்போடியன். பெற்றோர்களைப் பற்றி அவனுக்கு மங்கலான நினைவுதான் உண்டு. அவர்கள் அரசியல் பற்றி அறியாதவர்களாக வாழ்ந்த விவசாயிகள். 'நீங்கள் ஏகாதிபத்தியத்தின் கைக்கூலிகள்; வாழத் தகுதியற்றவர்கள்' என்று கூறிக் கொன்றுவிட்டார்கள். சாவு பிள்ளைகளுக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டிய சமிக்ஞையுமாம்! பொல்பொட் போராளிகளுக்கு உயிர்கள் மிக அற்பமானவை; மலிவானவை. மூன்று மகன்களை தம்முடன் அழைத்துச் சென்றார்கள். அண்ணன் 'இருவரும் அவர்கள் நடத்திய வேலை முகாம்களில் அரைகுறை வயிற்றுடன் உழைத்தும்...... செத்துப் போனார்கள். அந்தக் குடும்பத்தில் மிஞ்சியது வான் அங்ஹோ மட்டுமே. கம்பேபடியாவில் பல போராட்டக் குழுக்கள் எது எதற்காகப் போராடுகின்றது என்கிற நியாயமே மறக்கப்பட்டுவிட்டது! சாவு அவனைப் பல சந்தர்ப்பங்களிலே பயமுறுத்தியது. எப்படியும் சாவுதான் என்கிற தைரியத்தில் தாய்லாந்துக்குத் தப்பியோடிய ஒரு சிறிய குழுவுடன் ஒட்டிக் கொண்டான். அதிர்ஷ்டத்தின் சிறு ஈரலிப்பு. தாய்லாந்து அகதி முகாமிலே மூன்று ஆண்டுகள் வாழ்ந்து, அவனுடைய மாமா ஒருத்தர் அவுஸ்ரேலியாவில் இருப்பது தெரிய வந்து, ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இங்கு வந்துசேர்ந்தான். மாமாவின் தையல் கடையிலே அவன் ஓயாது உழைக்க வேண்டும். பாடசாலையிலே கொடுக்கப்படும் வீட்டு வேலைகளைச் செய்வதற்கூட அவனுக்கு நேரம் கிடைக்காது. ரயில் பயணத்தின் போது, லஞ்ச் நேர ஓய்வின் போது என்று அவன் எப்படியோ படித்துக் கொண்டிருந்தான். மரத்தடிக் கற்கையின்போதுதான் ஹோ காந்தனுக்கு அறிமுகமாகி நண்பனுமானான். 'எனக்கு இருக்கும் ஒரேயொரு உறவினரையும் என்எதிரியாக்கிக் கொள்ள நான் விரும்பவில்லை. அவரை விட்டுப் போனால் என் குடும்பத்திற்கு நான் அவமானந் தேடித் தந்தவனாவேன் .'என்று சொல்லுவான். சோகங்களின் மத்தியிலும் பண்பை பாதுகாக்கப் பழகிக் கெண்டவன்.

ஓடிக்கொண்டிக்கும் ரயிலுக்குள், தூரத்தில், யன்னல் ஓரத்தில், ஒருத்தி அமர்ந்திருந்தாள். அவள் சுடிதார் அணிந்திருந்தாள். நெற்றியில் திலகம். அவள் ஓர் இந்தியப் பெண்ணாக இருக்க வேண்டும். இங்குள்ள ஈழத் தமிழச்சிகள் பொட்டைத் துறந்து, 'ஸ்கேட்' 'பாண்ட்' ஆகிய புறக் கிருத்திரிமங்களால் விரைவாக 'ஒஸி' களாகும்பிரயத்தனத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். மயிலை நினைத்துச் சொந்தப் பாவனையையும் இழந்துவிட்ட வான்கோழிகள்! அந்தத் திலகம் இரத்த நிறத்தில்...

தாடையில் இரத்தம் வழிய நின்ற ஹோவின்உருவம் மீண்டும் காந்தனின் மனதில் எழுந்தது. குறுக் கிழையில் அப்பா—அண்ணன்மார்களின் உருவங்களும் வலம் வந்தன.'நான் மட்டும் எப்படிக் கோழையானேன்?' காந்தனின் மனம் புழுங்கியது. ஆனால், ஹோ...?அவன் தன் சுள்ளி உடம்பிலே உம்பாரப் பலம் சுமந்தான். அகதி முகாமிலே அவன் 'கராத்தே' கற்றவனாம்.

தாடையில் வழிந்த இரத்தத்தைத் துடைத்துக் கொண்டு, 'If you understand only the [anguage of violence, then come, என்று ஹோ தயாரானான். இந்தப் பிரதிபலிப்பை ஹரிஸன் சற்றும் எதிர்பார்க்கவில்லை. யாரும் எதிர்பார்க்காத சடுதியில் மத்யு இடையிலே புகுந்தான்.அவனுடைய தந்தை அகதிகள் நிர்மாணப் பணியிலே பெரிதும் ஈடுபட்டுள்ள பத்திரிகையாளர். மத்யு இன-நிற வேறு பாடுகள் பாராட்டாதவன். மனித நேயத்தின் பக்தன். இதனாலும், இனங்களுக்கு அப்பாற்படவும், அவன் எல்லா மாணவர்களுடைய மரியாதையையும் சம்பாதித்தவன்.

'Harrison, see sense...' என்று அவனை பிடித்து உலுக்கிய மத்யு 'கடகட'வென்று பேசினான்: 'வன்முறை வன்முறையைத்தான் பெருக்கும். இது 'அபோக்கள்' என்றழைக்கப்படும் பூர்வீக இனமான கறுப்பர்களின் நாடு. அவர்களுடைய உரிமைகளை அநியாயமாகப் பறித்துத்தான் நாங்கள் இந்த நாட்டிலே ஒரு வெள்ளை அவுஸ்ரேலியாவை உருவாக்கினோம்... நமது மூதாதையர் செய்த பாவங்களுக்கு பிராயச்சித்தம் தேடுவதற்கு ஆண்டவன் நமக்கு ஒரு சந்தர்ப்பம் தந்திருக்கிறான்... அதனை நழுவ விடாதே...'

'These fu.... are refugees...,' என்று ஹரிஸன் வெடித்தான். அவன் வெறி இன்னமும் தணியவில்லை. மத்யு தன் நிதானத்தை இழக்கத் தயார் இல்லை. பொறுமையாக ஒவ்வொரு சொல்லையும் அழுத்தி உச்சரித்தான்: இவர்கள் அகதிகளாகப் பிறக்கவில்லை.... பிறருடைய ஆதிக்க ஆசைகளினால் அகதிகளாக்கப்பட்டவர்கள். இதில் வெட்கப்படுவதற்கு எதுவும் இல்லை. அகதிகள் மலையனைய இடர்களைத் தாங்கும் வீரர்கள். இவர்கள் மத்தியில் மேதைகள் முகிழ்வார்கள். இந்த நூற்றாண்



படிப்பகம்

www.padippakam.com

இடத்திற்கு 'குஞ்சு'வின் பறப்பு நிகழ்ந்தால், 'குஞ்சு'வின் மூலம் விரைவாக என்னுடன் தொடர்பு கொள்ளவும். (இந்தச்சகோதரி தமது பெயரை பிரசுரிக்க வேண்டாமென்று கேட்டுள்ளார்-ஆ-ர்)

# நான் உன்னைத் தேடுகிறேன்

**9** யாழ்ப்பாணம்-கச்சேரியடியைப் பிறப்பிடமாகக்கொண்டவரும், தற்போது சுவிஸ்நரட்டில் சூரிச்சில் வசிப்பவருமான திருமதி **ஜானகி புஷ்பராகவன்** தம்முடன் வேம்படி மகளிர்கல்லூரியில் ஒன்றாக கல்வி பயின்ற யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடியைப் பிறப்பிடமாகக்கொண்ட செல்வி **இர்ராஜநாயகம் மங்கையற்கரசி**யைக் கடந்த ஆறு ஆண்டுகளாகத் தேடுகின்றார். மங்கையற்கரசி தற்போது மேற்கு ஜேர்மனியில்வாழ்வதாக அறிந்ததாகவும், ஆனால் முகவரியை அறிய முடியாத நிலையில் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

**10** நெல்லியடி கொடிகாமம் கோட்டடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கனடா-மொன்றியலில் வசிப்பவருமான **எஸ் முருகதாஸ்** தன்னுடன் கிரேக்க நாட்டுக் கப்பல் SPYROS-Gயில் ஒன்றாக வேலை செய்த திருமலை சிவன் கோயிலடியைச் சேர்ந்த **சந்திரசேகரம் சந்திரகுமாரை**க் கடந்த பத்து ஆண்டுகளாகத் தேடுகின்றார்.

**11** என் இனிய **கே.ராஜன்**

என் இதய தெய்வமாக இன்றும் உன்னையே என்இதயத்தில் வைத்துப் பூசிக்கின்றேன். கடந்த ஒன்பது வருடங்களாக உன்னையே பிரிந்து நான் படும் துன்பங்கள் சொல்லொணா. நீஎன்னைக்கடைசியாகச்சந்தித்த நல்லூர்க்கந்தன் சந்நிதானத்தில் தினமும் உன்னை நினைத்து உருகினேன். நாட்டை விட்டுப்போவதாகச் சொன்னாய். இப்பொழுது எங்கே இருக்கிறாய்? நான் படகு மூலம் குடும்பத்துடன் இந்தியா வந்து அகதிகளுள் ஒருத்தியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். எதிர்பாராத விதமாக 'அக்கினிக் குஞ்சு' படிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. வாழ்க 'அக்கினிக் குஞ்சு'வின் சேவை. நீ இருக்கும்

## நமது பழக்கங்கள்

விருந்து முடிந்தது. நானும் நண்பரும் சிகரெட் பற்ற வைத்த குச்சியை பிரபல எழுத்தாளர் முன் நீட்டினேன். அவர் பற்ற மறுத்து, புதிய குச்சியில் தமது சிகரெட்டைப் பற்றினார். உங்களுக்குக்கூட இந்த மூட நம்பிக்கை என்றேன். 'சுருட்டுப் பிடித்த காலத்திலே, மூவர் ஒரு குச்சியில் பற்ற வைத்தால் விரல் பொசுங்கிவிடும் என்று இந்தப் பழக்கம் வந்தது. சரியா?' என வினவினார். நான் பதில்ஏதும் கூறவில்லை. அவருக்கேஉரித்தானகுறுஞ் சிரிப்புடன், 'மூவர் ஒரே குச்சியில் பற்ற வைக்காத வழக்கம் மிலிட்டரிப் பழக்கம். அக்கம் பக்கமாக நின்று மூவரும் ஒருவருடைய கையிலிருந்த தீக்குச்சியை உபயோகித்தால், எதிரிக்குக் குறி வைக்க வாய்ப்பாகி விடும்' என்று விளக்கம் கூறினார். -இந்து

---

டின் சிந்தனைகளை மாற்றி அமைத்த விஞ்ஞான மேதை ஈன்ஸ்டீன் கூட ஓர் அகதி என்பதை மறக்காதே. எங்களுடைய மூதாதயர்களைப் பார்த்து விக்டோரியாமகாராணி காலத்து ஆங்கிலேயர்கள் எப்படி அழைத்தார்கள் தெரியுமா? சிறைப் பறவைகள் என்று... சிறைப் பறவைகள்!' சமர் நிலத்திலே கீதோபதேசம் வித்தப்பட்டது போன்ற ஒருசுகம்...மௌனம் சடைத்தது.

'நான் நம்புகின்றேன். சிறைப் பறவைகளின் வாரிசுகள் என்பதிலும் பார்க்க, அகதிகள் என்று அழைக்கப்படுவது கௌரவமானது....' என்று அமைதியாகவும், ஆழ்ந்த விசுவாசத்துடனும் மத்யு சொன்ன இறுதி வார்த்தைகள், காந்தனின் நெஞ்சக் குகையிலே எதிரொலித்தன.

ஹறிஸனை உருவாக்கிய அதே சமூகத்தினால் எப்படி மத்யுவையும் உருவாக்க முடியும்? 'ஏசு பிறந்த இனத்திலேதான் யூதாஸும் பிறந்தான்; காந்தியும் கோட்சேயும் ஒரே மண்ணின் அவதாரங்கள்' என்றெல்லாம் பிரசங்கித்தவருடைய மகனான காந்தனுடைய புத்தியின் பிடிமானத்திற்குள் இந்தவினாவுக்கான விடை சிக்குப் படவில்லை.

ரயில் ஓடிக் கொண்டிருந்தது... கரையிலே குத்திட்டு நின்ற மின்சாரக் கம்பங்களும், உயரிய பைன் மரங்களும், ஏனைய கறாளை மரங்களும், நெடிதும்—குள்ளமுமான கட்டடங்களும், தெருக்களும், அவற்றிலே விரைவு பயிலும் வாகனங்களும் எதிர்த் திசையிலே ஓடுவது போன்ற ஜாலம்...

ரயிலுக்குசேர்விடம் உண்டு. இடையிலே தரிக்கும் ஸ்டேசன்களும் உண்டு.

அகதிகளுக்கு....

அடுத்த தரிப்பிலே காந்தன் இறங்க வேண்டும். ஹோவும், மத்யுவும் மட்டுமல்ல, ஹறிஸன் களும் அவனுக்காகக் காத்திருக்கலாம்... புத்தகங்களை மீண்டும் அடுக்கி, தன் 'ஸ்கூல் பேக்'கைக் காந்தன் சரி செய்து கொண்டான்! ☐



படிப்பகம்

www.padippakam.com

# அனலும் மலரும்

**மண்டாடி சுப்பர்** மகன் திண்டாடி சுப்பர் மகன் கொண்டோடி சுப்பருக்கு வலுபுழுகம். கனநாளுக்குப் பிறகு சுதி ஏத்தியதில் திவ்விய திருப்தி. பனை கொடியேறி எவ்வளவு காலம். அலைஞ்சாலும் 'சாமான்' கிடைக்காது. படு அருந்தல். முந்தநாள் கிட்டினன்ரை பொடியனிட்டை, தன்ரை வெக்கத்தைக் கக்கத்துக்குள்ளை வைத்துக் கொண்டு, இலேசாய் வாயைப் போட்டார். வாய்ச்சுப்போச்சு. பொடியன் நறுவீசானவன். விடியக் காலமை கருக்கலுக்குள்ளை கொண்டு வந்து 'பாலப்பருப்பு'ப் போல ரெண்டு போத்தில் தந்திட்டுப் போனவன். புளாவிலை-புதுப் பனையோலையிலை அவன் தான் இணக்கித் தத்தவன்- கொஞ்சம் கொஞ்சமாத்தான் தொண்டையை நனைச்சு நனைச்சுக் குடிச்சவர். 'அமுதம் எண்டால், யாழ்ப்பாணத்துப் பனையிலை உடனிறக்கிற கள்ளுதான்' என்று பல தடவை பொச்சடித்துக் கொண்டார். 'கிளிப் பருவம்' எண்டும் சொல்லேலா. இந்த ஞான நிலையில் ஒன்றிப் பறப்பது, வஞ்சகமில்லாமல் சொல்ல வேணும், சோக்காத்தான் இருக்குது! எங்கேயோ மண்ணெண்ணெய் குடுக்கிறாங்கள் எண்டு கேள்விப்பட்டு, அவருடைய 'மனைவிளக்காம்' வக்கணைச் செல்லாச்சி போய் இருந்ததும், அவருடைய 'வாசிப்பு'க்கு வாய்ச்சுப் போச்சுது.

'இந்தப் புழுக்கையங்களாலை ஊரே நாசமாப்போச்சு' என்று புழுத்த பாட்டிலை மண்டகப் படி குடுத்த வண்ணம் அந்தப் பக்கத்தாலை 'கொழுவல்' வல்லிபுரம் வந்து கொண்டிருந்தார். அவருடைய ஆட்டத்தைத் தணிக்கும் நேரமும் 'பருவ'மும் கொண்டோடி சுப்பருக்கு! கொழுவலை மெல்லமாகக் கொழுவிப் பிடித்து, பர்ணசாலையாகப் பயன்படும் கொட்டிலுக்குள் கொண்டு வந்து சேர்த்தார்.

'இப்ப ஏன் வல்லிபுரம் கத்துறாய்?... அக்கம் பக்கத்திலை ஒருத்தரையும் காணம்...' என்று கொ. சு. பவ்வியமாக அடி எடுத்துக் கொடுத்தார்.

'அக்கம் பக்கம் ஒருத்தரும் இல்லை எண்டதாலை தானே கத்துறன்...? இப்ப சும்மா கத்தினாலும் அந்த அறுவான்கள் நெத்தியிலை பொட்டு வைச்சுப் போடுவாங்கள்...' என்று குரலை அடக்கி வாசித்தார். கொழுவலின் பார்வை, எட்ட நின்ற முள் முருக்கம் அடியில் எறும்புகள் மொய்த்துக் கொண்டிருந்த மண்டியின் மணத்தை நுகர்ந்தது. இதெல்லாம் பாம்பின் காலைப் பாம்பு அறியும் சங்கதிகள்!

'அலம்பாமல் விஷயம் முழுவதையும் கக்கும்... கொண்டோடி சுப்பர் ஒரு தயிலாப் பெட்டி மாதிரி ... விஷயம் பூட்டி வைச்ச மாதிரிப் பத்திரமாக் கிடக்கும்... மனப் பூங்காரம் போனாத்தான், மத்த மத்த அலுவல்களைக் கவனிக்கலாம்' என்று கொ. வ. நெஞ்சிலை விக்ஸ் போட்டு உருவுவது போலை கொ. சு. சொன்னார்.

'ஓமோம்... சொல்லாட்டிலும் நீர் ஆளை விடமாட்டீர்... உந்தப் புழுக்கையங்களை ஆர் இப்ப சண்டைப் பிடிக்கச் சொன்னது? நாங்கள் கேட்டனாங்கலே. படிச்சவங்களும் சாதிமான்களும் இங்கினை இல்லை எண்ட கொழுப்புத்தானே இவங்களுக்கு... அவங்கள் திரும்பி வந்தால் உங்களை மாவாக்கிப் போடுவாங்கள் என்டது தெரியாமல் உதுகள் கண்கடை தெரியாமல் துள்ளுதுகள்...'

'இஞ்சை... அவன் எப்பன் கள்ளுத்தான் கொண்டு வந்து தந்தவன்... அதைக் குடிச்சிட்டன். கொஞ்சம் முந்தி வந்திருந்தால் கண்ணாணை உமக்கும் கொஞ்சம் தந்திருப்பன்... சோக்கான தாவடிப் புகையிலை இருக்கு. நல்ல சுத்தொண்டு சுத்தித் தாறன்... நீர் நொதும்பலாய்க் கதைக்காதையும்... பாக்கு வெட்டியாலை துண்டு போட்டுச் சொல்லும். ஆர் அந்தப் புழுக்கையன்கள்?...' என்று கேட்ட கொ. சு. கருமமே கண்ணாக, மடியிலிருந்த தாவடிப் பொயிலையை எடுத்து இரண்டு சுத்துகளுக்கு அடிப் போட்டார்.

'தெரியாதது போலைக் கிண்டிறியள்... மரம் ஏறினவங்களுடைய பொடியளைத்தான் சொல்லுறன்... அந்தக் காலத்திலை 'கெற்றபோல்' எடுத்துக் குருவி அடிக்கவும் விட்டிருக்க மாட்டம்... இப்ப உந்தக் கீழ் சாதியள் துவக்கெடுத்து எங்களுக்காகச் சண்டை பிடிக்கினமாம்... உப்பிடி எல்லாம் நடக்கும் எண்டு கண்டனாங்களே...' கொ. வல்லிபுரம் எந்தத் தடத்திலை சிந்தித்து, இப்படி ஆக்ரோஷப்பட்டுத் துள்ளுகிறார்





படிப்பகம்

www.padippakam.com

என்பதை கொ. சு. சடக்கென்று கண்டு பிடித்து விட்டார்.

'உதே சங்கதி?... மன சாரக் கேழ்கிறன். படிச்சவங்கஞம் சாதிமான்களும் மட்டுமே எங்களுக்காகச் சண்டை பிடிக்க வேணும் எண்டு சொல்லுறியள்...'

'பேந்து? இவ்வளவு காலமும் யார் எங்கடை தமிழ் உரிமைகளுக்காகச் சண்டை பிடிச்சவ? சரித்திரத்தை இல்லை எண்டு சொல்லப் போறியளோ?' கொழுவல் ஆத்திரப்பட்டார்,

'கனநாளைக்குப் பிறகு உந்தச் சனியனாலை அடிச்சதிலை கொஞ்சம் ஏறீட்டுது... எங்கடை ஆக்களின்ரை வீர வரலாற்றை உங்கடை வாயாலை கொஞ்சம் சொல்லுமன்...'

'ஏன் இராமநாதன் துரை இல்லையே... சீமான் கட்டிய பரமேஸ்வராக் கல்லூரிதானே இப்ப யூனிவேர்சிட்டியாய் மாறியிருக்கு...' என்று கொ. வ. கொஞ்சம் திக்கினார்.

'சொல்லும்... கேட்டுக் கொண்டிருக்கிறன்...'

'எங்கடை ஐம்பதுக்கு ஐம்பது பொன்னம்பலம் ஐயா ஒரு விண்ணனல்லோ... சுப்பிறீம் கோட்டு ராசாவுக்குக்கூட லோ பொயின்ற் எடுத்துக் குடுப்பார்... குறுக்குக் கேள்வி கேட்டால், சாட்சிக் கூட்டிலை போலிசுக்காரன்கூடச் செத்துப்போவான்...'

'ஆர் இல்லையெண்டது? போலீஸ் சார்ஜெண்டே செத்தவன்... அவர் ஞணபதிரொங்கேயர் பொன்னம்பலமல்லே?'

'சீமெந்துத் தொழிற்சாலை பேப்பர் பக்டரி, பரந்தன் கெமிக்கல்ஸ் எல்லாம் ஐயாவின்ரை கெட்டித் தனத்தாலையல்லே தமிழ்ப் பகுதிக்கு வந்தது?...'

'ஓமோம்... இந்தாரும், சுத்தைப் பத்திக் கொண்டு கதையும்... உதுகளைச் சொல்லி உச்சுக் கொட்டினால், வெறும் வாய் புளிச்சுப்போகும்...' என்று கொ. சு. புகையிலைச் சுத்தை நீட்டினார். இருவரும் பத்திய மாய்ப் பற்ற வைத்துக் கொண்டார்கள். சாம்பிராணி புகைப் போட்டு இடத்தைச் சுத்தப்படுத்திறது போலை, 'மற்ற' தின்ரை மணத்தைப் புகையிலைப் புகையினால் அப்புறப்படுத்தினார்கள்.

'அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம் குறைவே? அவரும்...' என்று நிறுத்தி கொ.வ. புகையை இழுத்தார்.

'அவரும் சரியான சண்டியன். ஆருக்குத் தெரியாது? மாவிட்டபுரத்திலை கீழ்சாதியளைக் கும்பிட விடக்குடாது எண்டு நல்லா சண்டை புடிச்சவர். தமிழையும் சைவத்யையும் ஒண்டாப் புடிச்சு நிறுத்தினவர்.'

'சுப்பர் சும்மா நக்கலடிக் காதையும்... அவரின்ரை படிப்புக்குக் கிட்ட ஆராலை நிக்கமுடியும்? அது பெரிய Maths மூளையல்லோ?... "ஈழம் வேண்டும்" எண்டு முதலடி எடுத்துக் குடுத்ததும் அந்த அடங்காத் தமிழனல்லோ?... பேந்து தந்தை செல்வா... ஈழத்துக் காந்தி... நிறைகுடம்...'

'ஓமோம்... பெரிய சிவில் அப்புக்காத்தர்... தமிழரசுக் கட்சி எண்டு தமிழிலையும் Federal Party எண்டு இங்கிலீசிலும் வடிவா வேலையைக் குடுத்தவர்...'

'குறள் கதையள் உம்மை விட்டுப் போகாது... தமிழ் ஈழம் பிரேரணையை வட்டுக்கோட்டை மகாநாட்டிலை கொண்டுவந்தது ஆர்? அமிர்தலிங்கத்தைத் தளபதியாக்கியது யார்?... அமிர்த

## கொண்டோடி சுப்பர்

### ஈழத்துக் கல்வி வளர்ச்சி-5

அத்துடன், இது கல்விச் சபைக்கும், கல்வித் திணைக் களத்திற்கும் சட்ட பூர்வமான அந்தஸ்துக் கொடுத்தது. ஆரம்பப் பாடசாலைகள் சம்பந்தமாக வித்தியாதிபதிக்கு உதவி செய்வதற்கு மாவட்ட சபைகளும் நிறுவப் பட்டன.

ஆசிரியர்கள், பாடசாலைகள் சம்பந்தமான எல்லா விடயங்களையும் செயல்முறையில் நிர்வகிக்கக் கூடிய ஒரு' சட்டத்தொகுதி' இயற்றும் அதிகாரமும் கல்விச் சபைக்கு வழங்கப் பட்டது. இந்தச் சட்டத்தில் நிர்வாக விதிகள் மட்டுமன்றி, அரசாங்கத்தின் 'சமயக்கல்வி பற்றிய கொள்கையும் இணைக்கப் பட்டது. அரசாங்கப் பாடசாலைகளின் பாட விதானத்தில் சமயக் கல்வி இடம் பெறவில்லை. உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளில் எந்த ஒரு மாணாக்கனும் குறிப்பிட்ட ஒரு சமய பாடத்தைக் கற்கவோ, சமய அனுட்டானத்தை அனுட்டிக்கவோ வற்புறுத்தப் படலாகாது என்கிற 'மனச் சாட்சி விதி' யும் இடம் பெற்றது. இந்தச் சட்டத்தின் மிக முக்கியமானது 13-வது சரத்து எனலாம். அது வருமாறு:

உதவி நன்கொடை பெறும் பாட சாலைகள், அதிற் சேர அனுமதி கோரி விண்ணப்பிக்கும் எவருக்கும் அவருடையதோ அல்லது அவருடைய பெற்றோருடையதோ மத-இன-குல-சாதி-மொழி வேறுபாடுகளைக் கருத்திற் கொண்டு அனுமதி மறுக்கலாகாது.

-கல்விமான்



படிப்பகம்

www.padippakam.com

லிங்கத்துக்குப் பயந்தல்லோ, அவரை எதிர்க்கட்சித் தலைவ ராக்கினவங்கள்....இந்தப் பெருந் தலைகள் எல்லாம் இருந்த இடத் திலே உந்தப் புழுக்கையன்கள்...'

'கொஞ்சம் பொறும் வல்லி புரம்... அந்தத் தலைவரெல்லாம் என்னத்தாலை சன்டை பிடிச் சவை?...'

'குலத்துக்கேற்ற குணம்; படிப்புக்கேத்த புத்தி! புத்தியில் லாத எளிய சாதியல்லோ, எடுத் ததுக்கும் பாளைக் கத்தி தூக்கு கிறவன்... சண்டை பிடிப்பம் எண்டு வெருட்டிக் கொண்டு, மற்றப் பக்கம் நைஸாக் கதை யாலை வேலையைக் குடுக்க வேணும்...'

'இப்பிடி வேலையைக் குடுத்துக் கொண்டிருக்கேக்கிள் ளைதான், 83இலை, சிங்களவன் எங்கடை தமிழனுக்கு நாயடி பேயடி குடுத்துப் பாடம்படிப்பிச் சவன்... அது சரி, இப்ப இந்தப் படிச்ச சாதிமான்கள் எல்லாம் எங்கை?'

'நீர் அதாப்பியம் கதைக் கிறீர். படிச்சவங்கள் உந்தமோட் டுச் சிங்களவங்களுக்குப் பின் னாலை நிப்பாங்கலே? அவங்கடை படிப்புக்கு எங்கேயும் மரியாதை இருக்குது.

'அதுதான் கேக்கிறன் ஆக் கள் எங்கை?'

'அமெரிக்காவிலை, கனடா விலை, இங்கிலாந்திலை, அவுஸ் ரேலியாவிலை எண்டு எங்கடை சாதிமான் பொடியன்கள் வேலை பாக்கினம்... இதுவும் ஒண்டு சொல்ல வேணும். எங்கடை பொடியனின்ரை படிப்பைக் கண் டோனை வெள்ளைக்காரன் அவங்களுக்கு வேலை குடுத்திட் டுத்தான் மறுவேலை பார்ப்பா னாம்...'

'உவையளிலை கனபேர் அங்கை என்ன வேலை பாக்கி னம் எண்டது எனக்கு நல்லாத் தெரியும். அது கிடக்கட்டும்... ஊரிலை சண்டை நடக்குது... விட்டிட்டு ஓடுறவ, தானும் தன்ரை பெண்டிலும் பிள்ளைய ளும் தலை தப்பீட வேணும் எண்டு ஓடுறவ, பெரிய சண்டி யர்! நீர் என்ன கண்டறியாத நியாயம் கதைக்கிறீர்?'

'அப்படிப் போனவங்கிடை காசிலைதானே இப்ப ஆயுதங்கள் எல்லாம் வருகுது...' என்று இழுத்த கொழுவலார் நூர்ந்து போன சுத்தைப் பற்ற வைப்ப தில் மினக்கட்டார்.

'ஒரு கப்பல் துவக்கை இங்கை இறக்கினோடனை என்ன நடக்கும்?... படிச்சவன் - சாதி மான் அனுப்பி வைச்ச துவக்குக ளெல்லே?... உடனை, துவக்கு கள் தானாக எழும்பிக் கொண்டு ஓடிப் போய் சண்டை பிடிக்கும்.. ஆக்கள் இல்லாமல் துவக்குகள் சண்டை பிடிக்கிற வித்தை யைக் கண்டோடனை சிங்கள ஆமியும் கொக்காவில், மாங்கு ளம், கோட்டை எண்டு ஒவ் வொரு 'காம்'பாக விட்டிட்டு ஓடும்... அப்படித்தானே சண்டை நடக்குது?...' கொண்டோடி சுப் பர் தன்னை எங்கேயோ ஒரு பிடி பிடிச்சு மடக்கிக் கொண்டிருக்கி றார் என்ற விஷயம் அப்பொழுது தான் கொழுவல் வல்லிபுரத்துக்கு இலேசாக உறைக்கத் துவங்கி யது.

'புளுகிப் புளுகியே புழுத் துக் கொண்டிருக்கும் ஓர் இனந் தான் தமிழ் இனம். முதல் தோன்றின குரங்கு தமிழ்க் குரங் குதான் எண்டு சொல்லாட்டில் தமிழன்ரை தலை 'வெடிச்சுப் போகும். இராமநாதன் துரை துவக்கம் கடைசித் தளபதி அமிர் தலிங்கம் வரை பேசிப் பேசித் தானே தமிழ் இனம் குட்டிச் சுவ ரானது? இவை சண்டை பிடிக் காயினம். விசர் நாயளுக்கு முன் னாலை நிண்டு 'சூக்'காட்டு வினம்... பேசித் தந்திருந்தால், நாங்கள் சண்டை பிடிக்கிறதுக்கு மொக்கனுகளே?... வேறை ஒரு வழியுமில்லை; சண்டை பிடிக்கி றம்...' என்று இளகின இரும்பை ஓங்கி அடிச்சார் கொ. சு.

'ஒப்புக்கொள்ளுறன்...... அதுக்காகக் கண்ட நிண்ட சாதி யளும் துவக்குப் பிடிச்சுக் கொண்டு...'

'நீர் சாதிமான்... நாளைக் கே துவக்குத் தாறன்...'

'இந்த வயசிலையே...'

'உம்முடைய பொடியள் எல்லாம் எங்கை? கனடாப் பேரன் ராகுலுடைய படத் தோடை இரண்டாம் பிறந்த நாள் வாழ்த்துச் செய்தி ஒண்டு வீரகேசரியிலை விளம்பரமாய்

## எந்நாளோ?



பார்த்தொழில்
அனைத்தும் கொண்ட
பயன் தரும்
ஆலைக்கூட்டம்
ஆர்த்திடக்
கேட்ப தென்றோ?
அணிபெறத்
தமிழர் கூட்டம்
போர்த்தொழில்
பயில்வதெண்ணி
புவியெலாம்
நடுங்கிற்றென்ற
வார்த்தையைக்
கேட்டு நெஞ்சு
மகிழ்ந்து
கூத்தாடல் என்றோ?



படிப்பகம்

www.padippakam.com

வந்ததைப் பார்த்தனான். மக்கள்-மருமக்களுடைய பெயர்கள் U. K., CANADA, NORWAY எண்டெல்லாம் அடைப்புக் குறிக்குள் வடிவாப் போட்டிருந்தது... உப்பிடிக்கொத்த விளம்பரங்களைக் குடுத்தோடனை உங்கடை சாதியின்ரை பெருமையும், தமிழீழத்தின்ரை மானமும் எழும்பி நிண்டிடும் எண்டு நினைக்கிறியளோ?'

'நான் புறப்பட்டு வரேக்கிளை அவள் அறுதலி சீதேவிப்பிள்ளைதான் குறுக்காலை வந்தவள். முழிவிசளம் சரியில்லை. இஞ்சை கொழுவுப்பட்டு இழுபடுகிறன். நீர் அதாப்பியம் கதைக்கிறதிலை விண்ணன். தமிழீழம் வேணும் எண்டதுக்காக, ஆகமங்களைக் குப்பையிலை போட்டுக் கொளுத்திறதே? சும்மா கிடக்கிற வாயை கிளறாதையும்...'

'வாய் சும்மா இருக்கக் கூடாது எண்டுதான் சுத்துத் தந்தனான்... டச்சுக்காரன் யாழ்ப்பாணத்திலை நாற்பது சாதியள் இருக்கெண்டு குறிச்சு வைச்சான்... அதிலை மாதுவர், கோயிலார், தவசிகள், வன்னியர் சவடர், பரவர், முதலி, நம்பி நாடார் முதலிய சாதிகள் இந்த யாழ்ப்பாணத்திலை இப்ப எங்கை இருக்கினம் எண்டு சொல்லும்... நாலு வர்ணம் எப்படி காணும் இங்கை வந்தோடனை நாற்பது - நாற்பத்தெட்டாகப் பெருக்கெடுத்தது?...' பிராமணன் படித்தவன்-வேதம் ஓதுபவன்... அவங்களைக் 'கள்ளப் பிராமணியள்' எண்டு திட்டாட்டில் எங்ககளுக்குச் சாப்பாடு செமிக்காது. அடுத்தது சத்திரியன். அரசாளவும் போராடவும் பிறந்தவன். அதிலை- சத்திரியனிலை- எந்தச் சாதியள் அடங்கும்?... சொல்லுமன்...' நூரப் பார்த்த சுத்தின் தலைப்பை, இடக்கையின் பெரு விரலையும் சுண்டு விரலையும் இணைத்துக் கசக்கி அதன் நெருப்பை [illegible] கொ. சு. உசுப்பினார். கொழுவல் வல்லிபுரம் ஒன்றும் பேசவில்லை.

'பிரேமதாஸ ஆளுறான்... அவன் சத்திரியனே? யாழ்ப்பாணத்திலை, ஒரு காலத்திலை, அவன்ரை சாதிக்குச் செம்பிலை தண்ணி குடுத்திருப்பியளோ?... இப்ப அவரின்ரை வேட்டித் தலைப்பைப் பிடிச்சுக் கொண்டல்லே 'பேச்சுவார்த்தை' எண்டு ஓடித் திரியிறியள்... இலங்கை முழுவதையும் சூத்திரர் ஆளலாம்; சூத்திரர் எண்ட படியால் எங்கடை பொடியள் சண்டை பிடிக்கேலாது! நல்ல ஞாயம்... ஏன் வல்லிபுரம், இப்படிச் சாதியை இழுத்துப் பேசிப் பொடியங்கள் மத்தியிலை பிரிவினை ஏற்படுத்துறத்துக்கு கொழும்புக்குப் போய் ஏதேன் கொமிஷன் அடிச்சுக் கொண்டு வந்தனீரோ?... படிச்சவங்கள் நாட்டை விட்டு ஓடிப் போட்டாங்கள்... பணக்காரரும், அங்கினை இங்கினை எண்டு போனது போக, மிச்சப்பேர் கடைசி கொழும்பிலையும் இந்தியாவிலையும் எண்டு குந்தியிருக்கினம் அப்பசிங்களவன்ர ஆக்கினைக்கு ஆர்பதில் சொல்லுறது?... ஈழத்தின் மானத்தைக் காப்பாற்றச் சூத்திரர்களாவது கற்பகத் தருக் காடுகளிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பது குறித்து எனக்கு பரமதிருப்தி. நீர் வேளாளன் எண்டு சீல் குத்திக் கொண்டிருக்கின்றீர்... கொர்ணமேந்துச் சம்பளத்துக்காக ஸ்ரேஷன் மாஸ்டர் வேலை பார்த்துப் பெஞ்சன் வாங்கிக் கொண்டிருக்கிறீர். ஆகமத்தின் வர்ணாசிரமப்படி, செய்யும் தொழிலால் நீர் யார்? நிச்சயமாகப் பிராமணனும் அல்ல; சத்திரியனும் அல்ல வைசியனும் அல்ல... அப்ப நீர் யார்?'

கொ. வல்லிபுரம் அல்லாடி போனார். ஒன்றும் பேசமுடியவில்லை.

'சிம்பிள் விஷயங்களைப் பற்றிக் கனக்க யோசிச்சால் தலை'நட்'டுக் கழண்டு போகும். சனிக்கிழமை இஞ்சாலைப் பக்கம் வாருமன்... கிட்டினன்ரை பொடியனை வளைச்சு உமக்கும் கொண்டு வரச்சொல்லுறன்...' என்று கொ. சு. அபயமளித்துக் கொண்டிருக்கும் பொழுது '...நான் உந்த மனுஷனுக்குக் கழுத்தை நீட்டனனானோ, இல்லை அம்மிக் கல்லைத் தூக்கிக் கழுத்திலை கட்டினனானோ...' என்று பழஞ்சீலை கிழிச்சபடி, வக்கணைச் செல்லாச்சி படலையைத் திறந்து, வளவுக்குள் வந்தாள். அதே நேரம் பார்த்து, helicopter ஒன்று வானத்தில் பறந்து வருவது கேட்டது. கொழுவல் வல்லிபுரத்தின் விழிகளிலே அப்பிச் கொண்ட மரண பயத்தைப் பார்த்து மண்டாடி சுப்பர் மகன் திண்டாடி சுப்பர் மகன் கொண்டோடி சுப்பர் சிரித்துக் கொண்டார். அவருடைய சிரிப்பு அர்த்த புஷ்டியானது. □

**நமது பழக்கங்கள்**

அம்மா எலுமிச்சை மரத்தின் கீழிருந்து அரிசி கழுவுகிறாள். கிளையிலிருந்து காகம் தன்பாட்டிற்குக் கரைந்து கொண்டிருந்தது. "எங்க ஆட்கள் வாறதா இருந்தா பறந்து கத்து, உங்க ஆட்கள் வாறதா இருந்தா இருந்து கத்து" என்று கேட்கிறாள். காகம் இருந்து கத்திக் களைத்து, கத்திக் கொண்டே பறந்து செல்கின்றது. 'எங்க ஆட்கள் வருவதற்குச் சைகையாகக் காகம் கத்தினால், அன்றைக்கு விருந்தாளிகள் வருவார்களென்று அர்த்தமாம். காகத்தின் 'ஆட்கள்' வருவதற்குச் சைகை காட்டிக் கத்தினால், இழவுச் செய்தி வருமாம். விருந்தாளியும் எமனும் எப்படிக் காகத்தைத் தூதனுப்பினர் என்ற விளக்கத்தை அம்மா கூறவில்லை. -ஆர். பா.

www.padippakam.com

# ஒரு வல்லாளர்— ஒரு வசனம்

**தமிழ்** இலக்கியத்தினை ஈழத்து இலக்கிய வாதிகள் சங்ககாலத்து **ஈழத்துப்பூதன்** தொடக்கம் செழுமைப் படுத்தியதாக உரிமை உண்டு. பெருமையானது; உவகைக்குரியது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கம், நவீன வசன நடையின் வீறும் வீச்சும் தமிழ் இலக்கியத்திற்குப் புதித்துவ வளஞ் சேர்த்தது. வசன நடை ஆட்சியிலே புதிய பரிமாணங்களைக் காண்பதில் ஈழத்து இலக்கியவாணரின் பங்களிப்பு மகத்தானது. இலக்கியத்திலும் கலப்பட வியாபாரம் அமோகமாகிவரும் தமிழ்நாட்டில் இந்த உண்மை வசதியாக மறக்கப்படுதல் அவலமே.

வசன நடைக்கு ஆழமும் ஆளுமையுஞ் சேர்த்த ஈழத்து எழுத்துச்சித்தர்களுள் மூவரைச் சிறப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். காலத்தால் மூத்தவர் **ஆறுமுக நாவலர்**. முதன் முதலில் வசனநடை கைவந்த வல்லாளர் என ஏத்தப் பட்டவர். அவர் ஆளுமை சைவப் பணியிலும் சிதறியது. நாவலர் வசனத்திலே அமைந்த திருவிளையாடற் புராணத்திலே, 'அனாதி மலமுத்தரா......'எனத் துவங்கி '..வீற்றிருந்து அருளினார்' என முடிவடையும் முகப்பு வசனம் ஒன்று உண்டு. இந்தவசனமே நீளமான தமிழ்வசனமாய் நீண்ட காலமாகப் பயின்றது. நாவலர் தனித் தமிழ் என்று முரண்டு பிடிக்காத பண்டிதரும்! அவரை அடுத்து, அவர் பரம்பரையால் உருவாக்கப்பட்ட **பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை** தமிழுக்கு புதிது பெய்தார். பண்டிதர் மரபில் வந்து புரட்சி செய்த இந்த எழுத்துச் சித்தர், தமிழ்ச் சொற்களுக்குப் புதிய சுருதி சேர்த்தவர். ஈழத்தின் வசனநடை வல்லாளர்களின் கடைசிக் கொழுந்து **எஸ்.பொ.**

எஸ்.பொ. வின் நட்பினை முப்பது ஆண்டுகளுக்கு மேலாகச் சுகிக்கும் பாக்கியம் எனக்கு உண்டு. இதனால் அவருடைய இலக்கிய நோக்குகள் உருவான வர்த்தமானத்தையும், அவருடைய எழுத்து வகைகள் தோன்றிய வரலாற்றையும் நான் அறிவேன். அவர் மகத்தான சோம்பேறி. அவர், எழுத்திலே கொண்டாட வேண்டிய எத்தனையோ கருத்துக்களை காற்றிலே பறக்க விடுவார். நான் அறிந்தவரை இருபதுக்கும் மேற்பட்ட புனைபெயர்களிலே எழுதியுள்ளார். நான் அறியாதனவும் உள. அவருடைய புனைபெயர்கள் சிலவற்றை அவரே மறந்து போனார். தமது எழுத்துக்களை அவர் பாதுகாத்து வைத்ததுமில்லை. நாடோடியாக அலையும் ஒரு சித்தரும். இவற்றால் அவருடைய எழுத்துக்களை நாளைய தலைமுறையினரிடம் உரிய முறையிலே ஒப்படைத்தல் சிரமமான பணியாகியும் விட்டது.

'பிரச்சினைக்குரிய எழுத்தாளர்', 'இந்திரிய எழுத்தாளர்' 'விளங்குதில்லை எழுத்தாளர்' என்கிற வக்கணைச் சொற்களாலே எஸ்.பொ. வின் எழுத்துப் பணியை மதிப்பிட்டவர்களும் உளர். எஸ்.பொ. என்கிற எழுத்தாளர் இருப்பதான பிரக்ஞை தங்களுக்கு இல்லையென்கிற தோறணையில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தவர்கள்—குறிப்பாக, சங்கத்தைத் தங்கள் பதவி உயர்வுகளுக்காகப் பயன்படுத்திச் சுயஆதாயங்களிலே சிரத்தை ஊன்றிய கைலாசபதி-சிவத்தம்பி போன்ற வக்கிர விமர்சகர்கள் —பாவலாப் பண்ணிக் கொண்டிருந்த காலத்திலே, எழுத்துச் சத்தியம் நோற்கப் புறப்பட்ட மு.தளையசிங்கம் **'ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி-சில அவசரக் குறிப்புகள்'** என்ற கட்டுரைத் தொடரை **'செய்தி'**யில் எழுதினார். 1956 ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட ஈழத்தமிழ் இலக்கியத்தினை எஸ்.பொ. வின் எழுத்து ஆளுமை பாதித்தது போன்று எதுவும் நிகழ்ந்ததில்லை என அவர் அறிக்கையிட்டார். எஸ்.பொ.வின் எழுத்து வண்ணங்களும் வகைகளும் முழுமையாக மக்கள் மன்றத்திலே முன் வைக்கப் படுவதற்கு முற்பட்ட மதிப்பீடு இது என்பது குறிப்பிடத் தக்கது. பதச்சோறு கண்டு அநுபவித்த ஞானி தளையசிங்கம்!

மரபு வாதியாகக் குரல் கொடுத்த பேராசிரியர் **ஆ.சதாசிவம்**, 'மரபு எனப்படுவது சுழலும் சக்கரத்தின் அசையாப் புள்ளியே...' என்று எஸ்.பொ.கொடுத்த விளக்கங்களினால் போதகம் பெற்று, பழகு தமிழின் வண்ணத்தினை தரிசிக்க வந்தவர். எஸ்.பொ. எழுத்துக்களிலே பயிலப் படும் பழகு தமிழ்ச் சொற்களை அட்டவணை செய்து, ஈழத்துப் பழகுதமிழ் அகராதி ஒன்றினைத் தயாரிக்கும் பணியினைக் கொழும்புப் பல்கலைக் கழகத்திலே ஆரம்பித்தார். இந்தப் பணிக்கு வெளிநாட்டு ஆய்வு நிறுவனங்களின் நிதியுதவியும் கிடைத்தது. பேராசிரியரின் அகால மறைவுக்குப் பின்னர், இப்பணியின் கதி என்னவென்பது தெரியவில்லை. எழுபதுகளின் நடுப்பகுதியில் முனைவர் **தனஞ்செயராசசிங்கம்** வித்தியாலங்காரப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராய்ப்பணி புரிந்தார்.

**இளம்பிறை எம்.ஏ.ரஹ்மான்**



படிப்பகம்

www.padippakam.com

அப்பொழுது எஸ்.பொ. எழுத்துக்களைத் தமிழ் மாணாக்கருக்கு உரிய முறையிலே கற்பிக்கும் திட்டம் ஒன்றினை வகுப்பதிலே ஈடுபட்டிருந்ததை நான் அறிவேன். அவருடைய அகால மரணத்தின் பின்னர் அத்திட்டத்தின் கதியும் அறியுமாறில்லை.

எஸ்.பொ. வின் தமிழ் நடை வண்ணத்தை வாய் மணக்க போற்ற முந்தி நின்றவர்களுள் ஒருவர், தில்லிப் பல்கலைக் கழகப் பேராசிரியா **சாலை இளந்திரையன்**. தமிழ்ச் சிறுகதை வளத்திற்கு எ.ஸ்பொ. ஊட்டிய உரத்தை அவர் இனங் காட்டினார். அவருடைய மனைவி **சாலினி இளந்திரையன்** தமிழில் இது வரை வெளி வந்த சிறுகதைத் தொகுதிகளுள் எஸ.பொ.வின் **'வீ'**யே சிறந்தது என்று தமது ஆய்வு நூலில் தனி அத்தியாயம் ஒன்று எழுதி மகிழ்ந்தார். அவ்விருவருடைய வழிகாட்டுதலின் பேரில் எஸ்.பொ.வின் எழுத்துக்கள் தில்லிப் பல்கலைக் கழகத்தில் ஓரளவுக்கு ஆராயப்பட்டன. இருப்பினும், இருவரும் காலத்திற்கு முன்னரே இளைப்பாறிச் சென்னைக்கு வந்தமையும், எஸ்.பொ. எழுத்துக்களின் பெரும்பகுதி பத்திரிகைகளின் பக்கங்களிலே தூங்கிக் கொண்டிருப்பதும், இந்த ஆய்வினை நிறுத்தியது போலும்.

எஸ்.பொ 'ஈழத்துப் புனைகதை வரலாறும் வசனநடையும்' என்ற பாரிய ஆய்வுநூல் ஒன்றினை எழுதுவதற்குத் திட்டமிட்டிருந்தார். பேராசிரியர் சதாசிவத்தின் தூண்டுதலினால், கொழும்புப் பல்கலைக் கழகம் சார்ந்து இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மிக அபூர்வமான நூல்களை எல்லாம் மிகவும் அரிதின் முயன்று சேகரித்தார். ஏனைய எழுத்துப் பணிகளை ஒதுக்கி வைத்து, இந்த ஆய்விலே முழுக் கவனமும் ஊன்றினார். 1978 இல் மட்டக்களப்பிலே வீசிய கோரமான சூறாவளியிலே, அவருடைய ஆய்வுக் குறிப்புகள், ஈழத்தின் அரிய தொன்னூல்கள் அவருடைய கையெழுத்துப் பிரதிகள் ஆகிய சகலமும் அழிந்தன. இஃது அவருக்கு ஏற்பட்ட பாரிய இழப்பாகும். விரக்தி சூழ்ந்தது. எழுதுவதைத் துறந்தார். இந்த நிலையிலேதான் ஆபிரிக்கா செல்லவும்,அந்தக் கண்டத்தின் இலக்கியங்களைக் கற்பிக்கவும் அவருக்கு ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது. இந்தக் காலத்தில் தரமான ஆபிரிக்க இலக்கியங்கள் சிலவற்றைத் தமிழாக்கும் பணியில் ஈடுபட்டார்.

தற்பொழுது அவுஸ்ரேலியாவில் வாழும் அவர், புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்கள் மத்தியிலே முகிழ்ந்து வரும் இலக்கிய ஆர்வங்களை ஊக்குவிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். அப்பணியின் ஒரு கோலமே **அக்னிக் குஞ்சு** வின் இலக்கிய ஆலோசகராய் அவர் அமர்ந்துள்ளமை, பயனுள்ள பணி; காலத்திற்கு அவசியமான பணி.

அறுபதுகளின் பிற்கூறில், எஸ். பொ. எழுத்துக்களை மலிவித்தல் வேண்டும் என்றநோக்கத்துடன் அவருடைய நூல்களைப் பிரசுரிக்கும் பணியை மேற்கொண்டேன். நான் ஆசிரியனாய் அமர்ந்து ஈழத்திலிருந்து வெளியிட்ட **இளம் பிறை** என்னும் மாசிகையில் **எஸ். பொ.** எழுத்துக்கள் என்கிற ஒரு தனிப்பகுதியை அவருக்கு ஒதுக்கினேன். எஸ் பொ. எழுத்தின் பல்வேறு பாங்கங்களையும் அதிலே பிரசுரித்தல் என் நோக்கமாகஇருந்தது. எஸ்.பொ கிடப்பிலே போட்டுச் சோம்பல் ஓம்பிய எழுத்துக்களைக் கிளறும் உரிமையையும் பெற்றேன். அப்பொழுது, குறுநாவல் ஒன்றுக்கு அவர் எழுதிய முகப்பு வசனம் ஒன்றும் சிக்குப்பட்டது. 'இதுவரை தமிழில் எழுதப்பட்டுள்ள மிக நீண்ட வசனம் இதுதான்' என்று அவர் அதைப் பற்றி மிகச் சாதாரணமாகச் சொன்னார். அதனை **ஊன்** என்ற மருடத்தில் இளம்பிறையிற் பிரசுரித்தேன். இதில் வேடிக்கை என்னவென்றால், சிறுகதை இலக்கியம் பற்றி விமர்சனஞ் செய்ய விழைந்த பேராசிரியர் சிவத்தம்பி, அந்த ஒரே ஒரு வசனத்தைக் கண்டு மருண்டோ, மயங்கியோ, அதனை எஸ். பொ, வின் சிறந்த சிறுகதை எனச் சிலாகித்து எழுதவும் நேர்ந்தது! அவரைத் தடுமாறச் செய்த

## நமது பழக்கங்கள்



என் மாமா ஒருவர் தூரத்துக்குப் புறப்படுகின்றார் என்றால், தனியாகத் தெரியும், தோளிலே சால்வையின் ஏகவடம். காலிலே செருப்பு, கையிலே குடை முதலிய அலங்கார கிருத்தியங்கள் இதனைப் பறைசாற்றும். அவர் புறப்பட்டுத் தெருவில் வந்ததும் அடுத்த வீட்டு அப்பாமணி 'எங்கே போகிறீர்?' என்று கேட்டு விட்டார் எள்ளுங் கொள்ளும் முகத்திலே வெடிக்க, மாமா வீட்டுக்குத் திரும்பினார். பட்டினத்தில் ஏதோ மருந்தொன்று வாங்குவிக்கும் அவசரத்தில், அப்பாமணி என் மாமா சகுனம் பார்ப்பவர் என்ற விஷயத்தை மறந்து போனார். ஆனால், எப்பொழுதும் அவர் பஸ்ஸில் ஏறக் கால் வைத்ததும், பஸ் கொண்டக்டர் கேட்கும் முதலாவது கேள்வி, 'எங்கே போகின்றீர்?' என்பதுதான். அதற்காகக்கோபப்பட்டுக்கொண்டு மாமா வீடு திரும்பியது கிடையாது. —ஆர்.பா.



படிப்பகம்

www.padippakam.com

எஸ். பொ. வின் அந்த ஒரு வசனத்தை, இரண்டு தசாப்தங்கள் கழித்து, 'அக்கினிக் குஞ்சு' வின் வாசகர்களுடைய சுவைப்பிற்காக ஈண்டு தருகின்றேன்:

## குறுநாவல்; ஒரு வசனம்: ஊன்

**('வசன நடை கை வந்த வல்லாளர்' எழுதும் 'ஊன்' என்னும் குறுநாவலின் இந்த முதல் வசனம் திருக்கைலாச நடனத்தைத் தரிசிக்கவும் முழுமையாக உதவுகின்றது.)**

**அங்கே**—அநாதி அந்தம் சகலமும் ஒருவனேயான, சுடலைப் பொடி பூசியனான, பிறை சூடிய பித்தனான, அந்தப் பித்தமே தத்துவ விளக்கத்தின் அடிமுடியெனவும் விளக்க வல்லவனான சிவபிரானின் உறைவிடமாகிய கைலயம்கிரியிலே— நானாவிதச் சிகரங்களிலும் சீதளச் சூல்களை மௌனப் போர்வையில் அடைகாக்கும் வெள்ளிப் பனிப் பாளங்களை, சந்திப் பொழுதின் தங்கக் கதிர்கள் கலவி வேட்கையின் உபரியில் இறுகத் தழுவித் தன் நிறங்கவித்துச் சுகிக்கும் நேரத்திலே, கந்தருவர் - கின்னரர் - உரகர் - சுத்தர் - சித்தர் - வித்தியாதரர்-அமரர் - அப்ஸரஸுகள்-நாற்பத்தெண்ணாயிரம் இருடிகள் ஆகிய சகலரும் களிப்பு மது மாந்திக் கூடியிருக்கிற அவையிலே, அர்த்தநாரீஸ்வரனிடத்தில் உமையொரு பாகமாக இரண்டறக் கலந்து சுயத்தை இழந்தும், சுயத்தை இழக்காத தனி உருவமாகவும், திலகத்தின் திலகமாகவும், மையத்தின் மையமாகவும், சக்திகளின் சக்தியேயாகவும், அண்ட சராசரங்களுக்குத் தாயாகவும், அதே சமயம் குமரிமை அழியாத நித்திய திருக்கன்னியாகவும் விளங்கும் காமக்கொட்டி,கோமேதகம்-நீலம்-பவளம்-புட்பராகம்-மரகதம்-மாணிக்கம்-முத்து-வைடூரியம்-வைரம் ஆகிய பல மணிகளினாலான சித்திர வேலைப்பாடுகளுடன் சமைக்கப்பட்டு, அநந்த கோடி விண்மீன்களின் எரித்துகள்களை உகுத்துச் சோதிமயஞ் சிந்தும் தங்கத் திருத்தவிசிலே, மொட்டுக்கள் பூட்டவிழ்ந்து மலரும் இரகசியத்தை அவிழ்த்துக் காட்டும் விதத்தில் உமை தன் அதரங்களில் புன்னகைக் கொத்துகளைத் தவழ விட்டு வீற்றிருக்கையிலே, கொள்ளை இன்பங் குலவு கவிதை கூறு பாவலரும் பாவாரமியற்றி விதந்தேத்தும் பா முதல்வியும் பனுவலாட்டியுமான நான் முகன் கிழத்தி, வெள்ளைக் கலையுடுத்தி வீணாகானம் இயற்ற, வச்சிராயுதனும் அயிராவத பாகனுமான உம்பர் கோன் இந்திரன் வேய்ங் குழல் கானம் இயற்ற, துளபமௌலியனும் கமலக் கண்ணனும் கொண்டல் வண்ணனும் உலகுண்ட பெம்மானுமான விட்டுணு மத்தள ஓசை இயற்ற, திருமாலின் திருநாபிக் கமலத்தில் அவதரித்து வாணி கேள்வனான திசைமுகன் பிரம்மா, முன்னொரு காலத்திற் சிவனே ஆனந்தத் தாண்டவஞ் செய்யும் பொழுது, நித்திய கூத்தனின் திருப்பாதங்களை அலங்கரிக்கும் கழலொன்று கழன்று 'தா' என்ற ஒலியுடன் அவர் தோளைத் தொட்டு 'ளம்' என்ற சப்தத்துடன் நிலத்தில் விழுவதற்கு இடைப்பட்ட நேரத்தை நுட்பமாகக் கணக்கிட்டு, அந்த நேரக் கணிப்பிற்கு இசையத் தாளம் போட, பாற்கடலிற் பிறந்து நாராயணன் மார்புக் கணப்பினைச் சுகிக்கும் மாறிருமார்பினளாம் இலக்குமி, வீணை —வேய்ங்குழல் —மத்தளம் —தாளம் ஆகியவற்றின் இசைகளுடன் நேர்த்தியாக இசையும் வண்ணம், முல்லை முறுவல் வதியும் மென்னிதழ்கள் விரித்து, குயிலுக்குக் குரல் கற்றுக் கொடுக்கும் விதத்திற் பாட, நாதமே உலகமயம் என்ற சித்தமே நித்திய வடிவமென்னும் நித்தியத்துவங் காட்டும் நித்தியமே அநித்தியமாக, அந்த 'இல்லை'யே உண்மையின் உள்முடிச்செனக் காளாத்திரி காட்ட, அக்காளாத்திரியைத் தன் வாயிலேந்திய விரிசடை வாழ் அரவம் ஏமாப்புடன் மேலே பறக்கும் கருடனின் சுகபலனை விசாரிக்கும் அபிநயத்துடன் சென்னியை நிமிர்த்த, காமச் செருக்கிலே கருத்திழந்த பஞ்சபாணனை நீறாக்கவும் செந்தமிழை ஓம்பிய சங்கத்திலெழுந்த சம்வாதத்திற் சங்கறுக்கும் குலத்தோனின் வித்துவச் செருக்கை ஒறுக்கவுந் திறக்கப்பட்ட நெற்றிக்கண் மூடியிருக்க, இரு சுடர்களை அப்பிய மற்றிரு கண்களும் தேரோனின் மென் தழுவல் பட்டுப் பூப்படையும் பங்கயத்தின் பூரிப்பை படமெழுதிய வாக்கில் அலர, நஞ்சுண்ட வாயின் அதரங்களிலே குமிண் நகை பூக்க, பிறை துலங்க, தோடுகள் ஒளிர, படைத்தல்— காத்தல்— அழித்தல்— மறைத்தல்— அருளல் என்னும் ஐந்தொழிலையும் இயற்றும் திருக்கரங்களின் ஐயிரு விரல்களும் அபிநயத்தில் விரிய, ஈசன் தன் அந்தி நேரத்து நடனத்தைத் தொடங்கினான். □ □ □

---

"ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்கள் தமிழ் மக்களின் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த காலத்தில், **மீன்பிடித்** துறை அமைச்சராகப் பதவியேற்றார்..."

**"சீச்சீ... வால்பிடி....!"**

□ □ □

## அறுவை

## ராஜமித்ர

படிப்பகம்

www.padippakam.com

# சென்னை கடிதம்

## ஈழ அகதிகளுக்கு வைத்த குண்டு

**பழி** ஓரிடம் பாவம் ஓரிடம் என்பார்கள்.

இன்றைக்கு தமிழ்நாட்டில் உள்ள இலங்கை அகதிகள் அந்த பரிதாப நிலைமைக்குத்தான் இலக்காகி உள்ளனர்.

சென்னைக்கு அருகே மே.21 இரவு ராஜீவ் காந்தியை குண்டு வைத்து படுகொலை செய்தது இலங்கைத் தமிழ்ப் பெண்தான் என்ற செய்தி பரவியதும் இந்திய மக்களின்-குறிப்பாக தமிழக மக்களின் - மொத்த ஆவேசமும் எங்கே ஈழத்து அகதிகளின்பால் திசை திரும்பி விடுமோ என்ற அச்ச உணர்வு இங்குள்ள இலங்கையர் எல்லோரிடமும் மேலோங்கி இருந்தது. என்றாலும் தலைக்கு வந்தது தலைப் பாகையோடு போன மாதிரி அங்கொன்றும் இங்கொன்றுமாக அகதிகள் முகாம்களில் இடம் பெற்ற சில்லறை சலசலப்புகளை விட பயப்படும்படியாக எதுவும் நடைபெறாதது ஆறுதல் அளிப்பதாக உள்ளது.

இந்த ஆறுதல் கூட இந்த நிமிடம் வரை தற்காலிகமானது தான். எந்த நேரமும் எதுவும் நடக்கலாம் என்பது தான் யதார்த்த நிலை.

யாரோ ஒருத்தி எங்கிருந்தோ வந்து ராஜீவ் காந்திக்கு வைத்த வெடிகுண்டு இன்று தமிழ்நாட்டில் தங்கியுள்ள 2.15 லட்சம் ஈழத்தமிழ் அகதிகளுக்கும் வைக்கப்பட்ட குண்டாக மாறி விட்டது.

ஈழப் போராட்டத்தையும் அது பலஆண்டுகள் பின் தள்ளிப் போட்டு விட்டது.

தமிழ்நாட்டில் 1.20 லட்சம் ஈழத் தமிழ் அகதிகள் முகாம்களில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். இவர்களைவிட ஏறத்தாழ ஒரு லட்சம் பேர் முகாம்களுக்கு வெளியே தங்கி உள்ளனர்.

அவர்களிலும் கூட அரசின் ஆணைப்படி காவல் நிலையங்களில் தங்கள் பெயர் முகவரிகளை பதிவு செய்து கொண்டு தனிப்பட்ட முறையில் 'சொந்தக்கால்' பலத்தில் தங்கியிருப்பவர்கள் ஒரு சாரார். அவ்வாறு இல்லாமல் அதாவது, காவல் நிலையங்களில் பதிவு செய்யாமல் தங்கியிருப்போர் மறு சாரார்.

இவர்களைவிடவும் நூற்றுக் கணக்கானவர்கள்-பல்வேறு போராளிக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் - தனிமைப் படுத்தப்பட்டு தக்க பாதுகாப்புடன் தனிமைச் "சிறைகளில்" வைக்கப்பட்டு உள்ளனர்.

அத்தனைபேரது எதிர்காலமும் கேள்விக் குறியாகிவிட்டது. அவர்களுக்கு கொஞ்ச நஞ்சம் இருந்த'சுதந்திர'மும் இன்று பறி போய்விட்டது.

ராஜீவ் காந்தியின் படுகொலையைத் தொடர்ந்து தமிழக இ. காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி தான் முதலில் அடியெடுத்துக் கொடுத்தார், இலங்கை அகதிகளை உடனடியாக அவர்களது சொந்த நாட்டுக்கே திருப்பி அனுப்பி விட வேண்டும் என்று.

அதனை வழி மொழிந்தவர் அ.தி.மு.க.தலைவி செல்வி ஜெயலலிதா.

பொறுப்புள்ள இரண்டு தலைவர்கள் என்னதான் கோபாவேசம் என்றாலும் இப்படியெல்லாம் பொறுப்பில்லாமல் பேசியது கண்டு நியாய சிந்தை உள்ளோர் திடுக்கிட்டனர்.

நம்பி வந்தோரை இப்படி நட்டாற்றில் விடுவது என்ன நியாயம்? என்று திருப்பிக் கேட்டனர்.

அவர்களில் சிலர் இதனை மத்திய அரசின் கவனத்துக்கே கொண்டு சென்றதும், இலங்கை அகதிகளை ஈழப்பிரச்சினைக்கு இறுதி முடிவு ஏற்படும் வரை திருப்பி அனுப்ப மாட்டோம் என அரசு அறிவித்தல் வெளியிட்டு ஆறுதல் அளித்தது. எவரும் பொறுப்பில்லாமல் பேச வேண்டாம் என்று அது எச்சரித்தது. அப்படி பேசியவர்களைக் கூட அது தனிப்பட்ட முறையில் கண்டித்தது.

ஆனாலும், இலங்கை அகதிகளை வெளியேற்ற வேண்டும் என்றகுரல் ஒரேயடியாக ஓய்ந்து விட்டது என்று சொல்ல முடியாது. நாளும் பொழுதும் அது வெவ்வேறு ரூபத்தில் வெவ்வேறு இடங்களில்இருந்து அது வெளிப்பட்டு வருகிறது.

திருச்சி நகரசபை கூட ஒரு தீர்மானம் கொண்டு வந்தது. அத் தீர்மானத்தில், தமிழகத்தில் தங்கியுள்ள போராளிகளை இனம்கண்டு வெளியேற்ற வேண்டும் எனக் கோரப்பட்டது.

இதே வேளையில் மக்கள் பிரதிநிதியாக திகழ்ந்த ஒருவர், மத்திய அரசு அறிவித்த எச்சரிக்கையையும் பொருட்படுத்தாமல், இலங்கை அகதிகளை வெளியேற்ற வேண்டும் என்று குரல் கொடுத்திருக்கிறார். அத்துடன் இதுவரை இலங்கை அகதிகளுக்காக செலவிடப்பட்ட பணத்தையும் இலங்கையிடம் இந்திய அரசு கேட்டுப் பெற வேண்டும் என்றும்ஒரு யோசனையை அவர்



படிப்பகம்

www.padippakam.com


# KUMARAN BOOK CENTRE

SRI LANKAN AND INDIAN MAGAZINES, NEWS PAPERS, CINE-PUBLICATIONS

□

TAMIL AUDIO CASSETTES

□

SRI LANKAN FOOD PRODUCTS

□

திசை பத்திரிகை விற்பனையாளர்

□

வெளிநாட்டில் வாழும் உங்கள் உறவினர்-நண்பர்களுடன் உடனுக்குடன் **FAX** மூலமாக எளிதிலே தொடர்பு கொள்ள, 24 மணி நேரமும் மகிழ்ச்சியுடன் சேவை செய்யக் காத்திருக்கிறோம்.

## KUMARAN BOOK CENTRE

1, TOWER HAMLETS ROAD. LONDON E17 4RQ

Tel 01-520-5960 Fax 01-521-9482

**K. MAHESWARAN**



# VIDEO THARMAS

For your memorable days in video and photogrphy
with latest equipment and technique by experienced staff.

## TAMIL NEW YEAR'S SPECIAL 50 ·/. OFF.

□ and also catering for wedding and parties.
□ english typing with reasonable rates

Contact : THARMA/GNANI ON-4995068.

**5 WILLOW COURT**
**WEST HEIDELBERG**
**VICTORIA 3081,**




படிப்பகம்

www.padippakam.com

முன் மொழிந்திருக்கிறார்.

"பிதாவே! இவர்கள் அறியாமல் பேசுகிறார்கள்'' என்று ஓர் ஆறுதலுக்காக நாம் சொல்லிக் கொள்ளலாம். ஆனாலும் அவர்கள் அடிமனதில் இலங்கைத் தமிழ் மக்கள் மீது அதிருப்தி வளர்ந்து விட்டது என்பதை மறைக்க முடியாது.

அகதிகளை வெளியேற்றுவது தங்களால் முடியாதகாரியம் என்பது அவர்களுக்கே தெரியும் தான். என்றாலும் அப்படி ஒரு சிந்தனை அவர்களுக்கு வந்து விட்டதே, அதுதான் நமது வேதனை.

இந்தியாவில் தேர்தல் பாதியோடு நின்றுவிட்ட நிலையில் ராஜீவ் படுகொலை செய்யப்பட்டு விட்டார்.

ராஜீவ் படுகொலைக்கு இலங்கைத் தமிழர்கள்தான் காரணம் என்ற எண்ணமும் பரவலாக உருவாகி விட்டது.

தமிழ்நாட்டிலும், இந்தியாவிலும் தேர்தல் முடிந்து புதிய அரசுகள் அமைக்கப்பட்ட பிறகு, இந்தப் படுகொலைக்கு கருவியாகப் பயன்பட்டது இலங்கையர்கள்தான் அதிலும் அகதிகள் தான் என்று மெய்ப்பிக்கப்பட்டு விட்டால்......!

அப்போது இலங்கை அகதிகளுக்காக எத்தனை பேர் குரல் கொடுக்கப் போகிறார்கள் என்பதுதான் நமது கவலை.

முகாம்களில் உள்ள அகதிகள் நிலையும் இதுதான். மனோநிலை பாதிக்கப்பட்ட நிலையில் அவர்கள் உள்ளனர்.

ராஜீவ் படுகொலை செய்யப்பட்டு சில வாரங்கள் ஆன நிலையில் உருப்படியான துப்பு துலங்கியதாகத் தெரியவில்லை. துப்பு கிடைத்து விட்டதாக காவல் துறையினரும் கூற வில்லை.

அதனால் இலங்கைத் தமிழரைப் போன்று எவரைக் கண்டாலும் அவரை விசாரணைக் குழுவினர் விசாரணைக்கு உட்படுத்த தவறுவதில்லை.

இப்படி அகதிகள் முகாம் களிலும், வெளியிடங்களிலும் இச் செய்தி எழுதும்வரை சுமார் இரண்டாயிரத்துக்கும் மேலான இலங்கைத் தமிழரிடம், தமிழகத்தின் பல பகுதிகளிலும் அவர்கள் விசாரணை நடத்தி இருக்கின்றனர். சுமார் 60 பேரை கைது செய்துள்ளனர்.

இந்தியாவை, குறிப்பாக ராஜீவ் காந்தியை தங்களின் நம்பிக்கையின் சின்னமாக கருதியிருந்த ஈழத் தமிழ் மக்கள் ராஜீவ் படுகொலையில் இலங்கையர்களை சம்பந்தப் படுத்தியது கண்டு வெட்கத்தினால் குறுகிப் போய் உள்ளனர்.

கொலையாளி எப்படியும் விரைவில் பிடிபட்டு விட வேண்டும் என்ற அவர்களது ஆர்வம் வேறு எவரது ஆர்வத்திற்கும் சற்றும் சளைத்ததாக இல்லை,

நமது பிரார்த்தனை எல்லாம்கூட ஈழப் போராளிகள் யாரும் இந்தப் படுகொலையில் நேரடியாகவோ மறைமுகமாகவோ சமபந்தப் பட்டிருக்கக் கூடாது என்பதுதான்.

தங்களுக்கு இந்தப் படுகொலையில் எந்த சம்பந்தமும் இல்லை என்று ஈழப் புலிகள் தரப்பில் மறுக்கப் பட்டிருப்பதை நம்புவோம்.

ஈழப் புலிகளுக்கு இதில் சம்பந்தமிருக்காது என்று தமிழக, இந்திய அரசியல் வாதிகள் சிலர் கூறியிருப்பது உண்மையாக வேண்டும் என்று பிரார்த்திப்போம். ஈழப் புலிகளே கூட கொலையாளிகளை கண்டு பிடிப்பதற்கு உதவ முன் வந்துள்ளதை வரவேற்கிறோம்.

ராஜிவ்காந்தியைக் கொலை செய்த வெடிகுண்டு இலங்கைத் தமிழர் மீது இந்தியர்கள் வைத்திருந்த நம்பிக்கையை, அன்பை, ஆதரவை குற்றுயிராக்கி விட்டது.

அதனால், கொலையாளி பிடிபடுவதில் நாமும் முடிந்த அளவுக்கு உதவி, குற்றுயிர் ஆக்கப்பட்டு விட்ட இந்திய மக்களின் நம்பிக்கையை புத்துயிர் பெறச் செய்வதை ஒரு கடமையாக ஏற்போம்.-

தமிழீழத்தில் வன்முறை 'ஆட்சிக்கு' வந்த பிறகு அங்கு படிப்பைத் தொடர முடியாமல் தமிழகத்திற்குஓடிவந்துபல்வேறு அரசு, தனியார் கல்வி நிலையங்களில் ஏராளமான ஈழத்து மாணவர்கள் கல்வி கற்று வருகிறார்கள்.

பொறியியல், தொழில் நுட்ப, மருத்துவ, விவசாயக் கல்லூரிகளில் அவர்களுக் கென்று தனிச் சலுகை அடிப் படையில் சிலஇடங்கள் ஒதுக்கப் பட்டு வந்தன.

இப்போது கல்லூரிகள் மீண்டும் திறக்கப் படவிருக்கும் நேரம்.

நடப்பு ஆண்டிலும் ஈழத்து மாணவர்களுக்கு உயர்கல்வி நிலையங்களில் வழக்கம் போல இடம் கிடைக்குமா என்பது கேள்விக் குறியாக்கப் பட்டு விட்டது.

கல்லூரிகளை விடுங்கள். உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலேயேகூட இலங்கை மாணவர்கள் என்றதும் முகம் சுளிக்கிறார்கள். முகம் சுளிப்பதென்ன, அவர்களை சேர்த்துக் கொள்ளவே முடியாது என்று தயவு தாட்சண்யமின்றி கூறி விட்டார்கள்.

பள்ளிக்கல்விக்கே இப்படி ஒரு திண்டாட்டம் என்றால் கல்லூரிக் கல்விக்கான அனுமதியில் என்ன நடக்குமோ என்று மனம் தவிக்கிறது.

**-எஸ். எம். கார்மேகம்**

---

**சுபம்:** தமிழ்ப் படங்கள் எப் பொழுதுமே இன்பமாக முடிகின்றன. அதாவது, படம் முடிந்து விட்டதே என்கிற இன்பம்.



படிப்பகம்

www.padippakam.com

With the best compliments from;

# RAVI, JAMES & ASSOCIATES

BARRISTERS & SOLICITERS

**All legal work including............**

**FAMILY LAW**
**IMMIGRATION**
**PERSONNEL INJURIES**

**WORK CARE**
**GENERAL/COMMERCIAL LITIGATION**
**CONVEYANCING**

**SALES/PURCHASE BUSINESS**
**LEASE,WILLS AND PROBATE**
**INSURANCE & FINANCIAL SERVICES**

**The expetise to help you with all your legal, insurance and financial needs**

□

Telephone ; 388 2091 Fax ; 388 2092
558, Sydney Road,
Brunswick, Vic 3056
AUSTRALIA
Contact ; S, RAVEENDRAN -A.H. 497 3738



படிப்பகம்

www.padippakam.com




☐ இசைவாரிசுகள் எவருமே தந்தையைப் போல இங்கு புகழ் பெற முடிவதில்லை. டி.எம்.எஸ். செல்வகுமார், டி.எல்.மகராஜன், தீபன் சக்ரவர்த்தி, சூலமங்கலம் முரளி. இப்படி உதாரணங்களை சொல்லிக் கொண்டே போக லாம். ஆனால், டாக்டர் சீர்காழி சிவசிதம்பரம் இதற்கு விதிவிலக் காகத் திகழ்கிறார்.

தோற்றத்திலும், தேவகானமாக ஒலிக்கும் அந்த வெண்கலக்குரலி லும் மாத்திரமன்றி பண்பிலும், அடக்கத்திலும் கூட அப்படியே தந்தையாரின் மறுவடிவமாகத் திகழ்பவர் **டாக்டர் சிவசிதம்பரம்**. அவரை அண்மையில் சந்தித்த போது ஈழத்து இசை ரசிகர்களைப் பற்றி ரொம்பவும் சிலாகித்துப் பேசினார்.

"ஈழத்து ரசிகர்களின் இசை ரசனையும் அவர்களது தனித்துவ மான ஆன்மீக உணர்வுகளும் என்னை சிலிர்க்க வைக்கும். இன்றைக்கும் பிரான்ஸ், ஜெர் மனி, லண்டன் என்று மேலை நாடுகளில் எனது இசைக்கச்சேரி நடக்கும் இடங்களில் எல்லாம்



ஈழத்தின் இசை ரசிகர்கள் பெரு மளவில் திரண்டு வந்து என்னை உற்சாகப் படுத்தும் போது... என் தந்தையாரின் ஞாபகம் வரும். இலங்கைக்கு அதிகமான தடவைகள் சென்று இசைமழை பொழிந்தவர் அவர். அவருக்கும் இலங்கை ரசிகர்களுக்கும் இடையே இருந்த அந்த ஆத்மப் பிணைப்புத்தான் இன்றைக்கும் அவரது பாடல்களை அவர்கள் விரும்பிக் கேட்பதற்குக் காரணம் என்று நினைக்கிறேன்.

ஒருமுறை அப்பாவை இலங் கைக்கு இசைக் கச்சேரிக்காக அழைத்த போது அப்பா சொன் னார். "ஈழத்து ரசிகர்கள் எனது இசையிலே காட்டும் ஈடுபாட்டை யும் ஆர்வத்தையும், பார்க்கும் போது 'சீர்காழிகோவிந்தராஜன்' என்றபெயர் மாறி 'சிறீலங்கா கோவிந்தராஜன்' ஆகி விடுவேன் போல் உள்ளது. அவர்களின் அன்பை நான் மதிக்கிறேன்.

ஆனால் இந்த முறை நான் இலங்கைக்கு வர விரும்பவில்லை. தமிழ்நாட்டில் சிறப்பான பாடகர்கள் எத்த னையோ பேர் இருக்கிறார்கள். அவர்களையும் இலங்கைக்கு அழைத்துச் செல்லுங்கள். தொ டர்ந்து என்னையே நீங்கள் கூப் பிடுகிறீர்கள். மற்றப் பாடகர்க ளுக்கும் நீங்கள் வாய்ப்பளிக்க வேண்டும்" என்றுபெருந்தன்மை யோடு சொன்னார் எனது தந்தையார்."

இந்தத் தகவலை டாக்டர் சிவசிதம்பரம் என்னிடம் சொன் னபோது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

ரெக்கார்டிங் ரூமிலேயே

## ஈழத்துக் கல்வி வளர்ச்சி 6

1927-ஆம் ஆண்டில் கல்விச் சபைக்கு 'சட்டத் தொகுப்பு'களை நடைமு றைக்குக் கொண்டு வரும் அதிகாரம்வழங்கப்பட்டது. காலத்திற்குக் காலம் அவற் றிலே மாற்றங்கள் ஏற்ப டவே, 1929-ம் ஆண்டில், மூன்று வெவ்வேறு சட்டத் தொகுப்புகள் நடைமுறை யில் இருந்தன. முதலாவது, அரசாங்க பாடசாலைக ளைக் கட்டுப்படுத்துவதாக வும், இரண்டாவது, உதவி நன்கொடை பெறும் சுயபா ஷை அல்லது துவிபா ஷைப் பாடசாலைகளைக்கட் டுப்படுத்துவதாகவும், மூன் றாவது, உதவி நன்கொடை பெறும் ஆங்கிலப் பாடசா லைகளைக் கட்டுப்படுத்தத் தக்கதாகவும் அமைந்தன.

இந்தச் சட்டத் தொகுப்பு களில் அடங்கிய பிறிதொரு பிரதான அம்சமும் உண்டு. அஃது ஆதாய நோக்கத் தைத் தடுத்தது. உதவி நன் கொடை பெறும் பாடசா லையின் முகாமையாளரோ, அல்லது சொந்தக்காரரோ சுய ஆதாயம் பெறவோ சம்பளம் பெறவோ அநு மதிக்கப்படவில்லை. நன் கொடையிலிருந்தும் கட்ட ணங்களிலிருந்தும் கிடைக் கும் முழுவருவாயும் கல்வி சம்பந்தமான நோக்குகளுக் காக மட்டுமே செலவு செய் யப்படல் வேண்டும் என வும் வலியுறுத்தப்பட்டது.

—கல்விமான்



படிப்பகம்

www.padippakam.com

'அண்ணே அவர் பாடற பாட்டையும் நானே பாடிடுறேனே...' என்று அடுத்தவன் வயிற்றிலேயே கை போடும் இன்றைய காலகட்டத்தையும்-சீர்காழியின் பொற்காலத்தையும் - ஒப்பிட்டுப் பேசுவதே ஒரு இசை பாவம், தான்! இன்றைக்கு கோடம்பாக்க கலை மாடத்தில் பகிர்ந்துண்ணும் காக்கைகளை விட தட்டிப் பறிக்கும் காக்கைகள் தானே அதிகம்!!

☐ இப்பொதெல்லாம் 'பி அண்டு சி' ஏரியாக்களில் சூப்பர் ஸ்டார் படங்களுக்கு அடுத்தபடியாக சத்யராஜ் படங்களுக்கே திருப்திகரமான கலெக்ஷன்! கொங்கு தமிழில் சற்று அலட்சியமான வசன உச்சரிப்பு,'மேக்கப்' பிலும் காஸ்டியூமிலும் எம்.ஜி. ஆரை ஞாபகமூட்டும் தோற்றம்.... இவை எல்லாம் 'பி அண்டு சி' ஏரியாக்களில் அவர் படங்களுக்கு நல்ல வரவேற்பைப் பெற்றுக் கொடுக்கின்றன.

சத்யராஜிக்கு சமீபத்தில் ஓர் ஆசை! ஜனரஞ்சகமான படங்களிலே நடித்து வந்த கமல், ஒரு மாற்றத்துக்காக (அல்லது கலா திருப்திக்காக) கிளாஸ்பிக்சரில் ('நாயகன், 'ராஜபார்வை), நடித்ததைப் போல தாமும் எதாவது ஒரு கிளாஸ் பிக்சரில் நடிக்க வேண்டும்.

ஆனால்—

சத்யராஜ் கிளாஸ் பிக்சரில் நடித்தால் அவரது ரசிகர்கள் ஏற்றுக் கொள்வார்களா? எல்லாவற்றையும் விட புரொடியூசர்ஸ் 'ரிஸ்க்' எடுக்க முன் வருவார்களா?

சத்யராஜ் பின்வாங்கவில்லை.

தமது உதவியாளர் ராமநாதனைத் தயாரிப்பாளராக்கி தமிழ்ப்படவுலகின் Class Director ஒருவரின் சிஷ்யனையே இயக்குநராகப் போட்டு படப்பிடிப்பை ஆரம்பித்து விட்டார்.

படத்தின் பெயர் 'பிரம்மா' பிரம்மாவை இயக்குபவர் 'நாயகன்','அஞ்சலி' புகழ் இயக்குனர் மணிரத்னத்தின் சிஷ்யர் கே. சுபாஷ்.

சிருஷ்டியில் இருக்கும் 'பிரம்மா' ஆகஸ்டு மாதம் திரைக்கு வரலாம்.

☐ நகைச்சுவை நடிகர் எஸ்.வி.சேகர், திரைப்பட நடிகராக அறிமுகம் பெறுவதற்கு முன்பே இலங்கை வானொலி நேயர்களுக்கு நன்கு அறிமுகமானவர். 'தமிழ்ச்சேவை இரண்டு' வழங்கிய'ஒலிச்சித்திரம்' நிகழ்ச்சி தயாரிப்புக்காக'வசந்தமாளிகை' 'தங்கப்பதக்கம்' 'நம்நாடு' உட்பட நூற்றுக் கணக்கான படங்களை அழகாக 'எடிட்' செய்து வழங்கி இலங்கை வானொலி நேயர்களின் நெஞ்சம் கவர்ந்தவர்.

'மக்களை சிரிக்க வைத்து மகிழ்ச்சிப்படுத்துவதே என்பணி' என்று கூறும் எஸ்.வி.சேகர் நகைச்சுவை நாடகத்தில் தமக்கென ஒரு புதிய பாணியை உருவாக்கி அதில் தொடர்ந்து வெற்றிகளைக் குவித்து வருபவர். 5000க்கும் மேற்பட்ட மேடையேற்றம்! 'திரைப்படத்தால் நாடகம் நலிந்தது. டி.வியால் இரண்டுமே நலிந்தது!' என்பது எஸ்.வி.சேகரின் நாடகங்களைப் பொறுத்தவரையில் பொய்த்துப் போகிறது.

'யாமிருக்க பயமேன்?' சமீபத்தில் மேடையேறிய இவரது புதிய நாடகம். அரங்குகளில் மேலதிக இருக்கைகள்!

'வீட்லே எலி வெளியே புலி', 'பொண்டாட்டி பொண்டாட்டிதான்' எஸ்.வி.சேகர் கதாநாயகனாக நடித்து விரைவில் வெளிவர இருக்கும் படங்கள்.

இவை தவிர 'வண்ணக் கோலங்கள்' டி.வி.தொடரின் இரண்டாம் பாகத்தை படமாக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டிருக்கிறார் எஸ்.வி.சேகர். இம்மாதம் முதன்முதலாக இவரது முழுநீள நகைச்சுவை நாடகங்கள் ஐந்து இலங்கையில்(கொழும்பு) மேடையேறுகின்றன.

☐ தமிழ்ப் படவுலகில் 'மந்தைசாபம்' இன்னும்மாறவே இல்லை.

1979ல் கதாநாயகனுக்கு 'கான்சர்' வந்த படம் ஓஹோ என்று ஓடிவிட்டது என்பதற்காக அடுத்தடுத்து வந்த படங்களில் எல்லாம் ஆரோக்கியமாகஇருந்த கதாநாயகனுக்கு 'திடும்' என கேன்சரைக் கொடுத்து அந்திமச் சடங்கு செய்தார்கள்.

எண்பதுகளில் பி.டி.உஷா கலாசாரம் பரவியது(அதாவது காதலனும் காதலியும் ஊரை விட்டு ஒரே ஓட்டமாக ஓடுவதைப் போல வரிசையாகப் பல படங்கள் வெளிவந்தன.)

☐ ஆர்.சி.சக்தியின் 'சிறை' படத்தின் வெற்றிக்குப் பின் நிறைய 'தாலி' அறுப்புப்படங்கள் வெளிவந்தன. ஸ்லோமோஷனில் பல தாலிகள் அறுக்கப்பட்டன.

☐ இப்போது....

'ஆடிவெள்ளி', 'துர்கா' 'தைப்பூசம்' என மிருக சாகசப் படங்களின் வெற்றியைத் தொடர்ந்து மிருகங்களை மையமாக வைத்தே சுமார் 15 படங்களுக்கு மேல் பூஜை போடப்பட்டிருக்கின்றன.

டோனியும்(நாய்), ராக்கியும்(குரங்கு) நல்ல பிஸி! இவர்களின் கால்ஷீட்டை அனுசரித்துத்தான் நிழல்கள்ரவியோ, கனகாவோ 'டேட்ஸ்' கொடுக்க வேண்டும்.

☐ இன்னொரு சைடில்-'வைஜெயந்தி ஐ.பி.எஸ்' வெற்றியைத் தொடர்ந்து பெண்களை வீராங்கனைகளாகவும் ஆணாதிக்கத்தை எதிர்ப்பவர்களாகவும் சித்திரித்து 'அர்ச்சனாஐ.ஏ.எஸ்', 'பாஞ்சாலிசபதம்', 'சீதாகீதா'... இப்படி பலபடங்கள்தயாரிக்கட்டு வருகின்றன. இது எங்கே போய் முடியும் என்பது தெரியவில்லை. அடிபட்டாலும் ஆட்டுமந்தைத் தனத்தை விட தயாரிப்பாளர் யாருமே தயராக இல்லை.

**-யாழ். சுதாகர்**



படிப்பகம்

www.padippakam.com



WROUGHT IRON ARTICLES
WROUGHT IRON GATES & FENCING
WROUGHT IRON SECURITY DOOR& GRILLS
WROUGHT IRON MACHINES MANUFACTURE
ALUMINIUM & STEEL FENCING
ALUMINIUM DOORS & WINDOWS
SECURITY LOCKS
HOME REPAIRS & MAINTENANCE

இரும்புத் தளபாடங்கள்
இரும்பு 'கேற்'கள் - வேலிகள்
இரும்புப் பாதுகாப்புக் கதவுகளும் கிறில்களும்
இரும்பு மெஷின் தயாரிப்புகள்
அலுமீனியம் - உருக்கு வேலிகள்
அலுமீனியம் கதவுகளும் ஜன்னல்களும்
பாதுகாப்புப் பூட்டுகள்
வீட்டுத் திருத்த வேலைகள்

# RAS INDUSTRIES PTY LTD

QUALITY BY PERFORMANCE

FACTORY 4, 38 AMBERLY CRESCENT
DANDENONG, VICTORIA 3175, AUSTRALIA
TEL (03) 706-7401 A H. (03) 793-5857



# ராஸ் இன்டஸ்ரீஸ் பிரைவேட் லிமிட்டட்

வேலைப்பாடுகளில் திறமை


தொழிற் கூடம் 4, 38 அம்பேர்லி கிறசென்ற்
டான்டெனொங், விக்டோரியா 3175, அவுஸ்ரேலியா
தொலைபேசி (03) 706 - 7401 (03) 793 5857


படிப்பகம்

www.padippakam.com



CAPITAL AUTOS



உங்கள் வாகன

திருத்த வேலைகள் எதுவாயினும்

உங்கள் திருப்தியே

எங்கள் சேவையாகும்.

CAPITAL AUTOS

311, SPROWSTON MEWS FOREST GATE, LONDON, E7 9AE

(REAR OF 311, ROMFORD ROAD)

TEL:519-6187

Printed and Published by M. A. Rahman at AR prints, 375-8, Arcot Road, MADRAS-600 024 on behalf of PRIYA PUBLICATIONS, AUSTRALIA. Editor : YAL. S. BASKAR

படிப்பகம்